

புதுச்சேரி ராமகிருஷ்ணா நகர்

# ஸ்ரீ ஹயக்ரீவர் திருக்கோவில்

பற்றிய குறிப்புகள் (ஆங்கிலத்தில்)

## ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம்

குறித்த எளிய விளக்கவுரை, அஷ்டோத்தர ஶத நாமாவளிகள்



புதுச்சேரி ராமகிருஷ்ணா நகர்

# ஸ்ரீ ஹயக்ரீவர் திருக்கோவில்

பற்றிய குறிப்புகள் (ஆங்கிலத்தில்)

## ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம்

குறித்த எளிய விளக்கவுரை, அஷ்டோத்தர ஶத நாமாவளிகள்



ஸ்ரீ லக்ஷ்மீஸரஸ் மாருதி

**ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**

ராமக்ருஷ்ணா நகர், புதுச்சேரி-3.

Phone : 0413 - 2260096



## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | புதுச்சேரி ராமகிருஷ்ணா நகர் ஸ்ரீ ஹயக்ரீவர் திருக்கோவில் பற்றிய குறிப்புகள்<br>ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் குறித்த எளிய விளக்கவுரை,<br>அஷ்டோத்தர ஶத நாமாவளிகள் |
| முதற் பதிப்பு | : | ஸ்ரீ ஜய வருஷம், புரட்டாசி திருவோணம் - 2014 |
| விளக்கவுரை | : | ஸ்ரீமதி விஷ்ணுப்ரியா சாரி |
| நூல் தொகுப்பு | : | ஸ்ரீ S. வாஸுதேவன், Mobile: 94453 90591 |
| நூலின் அளவு | : | Demy 1/8 |
| தாள் | : | 70 GSM மேப்லித்தோ |
| பக்கங்கள் | : | 48 |
| வெளியீடு | : | ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்<br>ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி-3. |
| அச்சிட்டோர் | : | K. ஸ்ரீதரன்<br>ஸ்ரீ மஹாலக்ஷ்மி அன் கோ<br>நெ.12/31, ஜுபிலி சாலை,<br>சென்னை-33, Mobile : 94441 58817 |
| வடிவமைப்பு | : | மஹாமதி க்ராபிக்ஸ்<br>நெ.10/26, ரங்கபாஷ்யம் தெரு,<br>சைதாப்பேட்டை, சென்னை-600 015.<br>Mobile : 9840 290 883 |

## நன்றியுரை

ஸ்ரீ உ.ப.வே ஸந்தானம் ஐயங்கார், (வைகுண்டவாஸி) ஸ்ரீமதி ருக்மணியம்மாள் (வைகுண்டவாஸி) திருக்குமாரர் ஸ்ரீ உ.ப.வே வாஸுதேவாச்சாரியார் ஸ்வாமி இந்த நூலைத் தொகுத்து வெளிக்கொண்டு வந்துள்ளார். ஸ்வாமி மேலும் கைங்கர்யங்களை அபரிமிதமாகப் பெற்று அவருடைய குடும்பத்துடன் ஶாஶ்வதமான பலன்களைப் பெற்று பல்லாண்டு ஸுகித்திருக்க ஶரண்ய தம்பதிகளை ப்ரார்த்திக்கின்றோம்.

இதை வெளியிட பொருளுதவி செய்து மஹோபகாரம் செய்த ஸ்ரீமான் D. கிருஷ்ணமாச்சாரி, திருமதி. ஜெயம்மாள் தம்பதி குமாரர் ஸ்ரீமான் ராம்குமாரும் அவருடைய குடும்பத்தாரும் சீரும் சிறப்புமாக இசைபட பல்லாண்டு வாழ திவ்யதம்பதிகளை ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீமத் ஆண்டவன் அநுக்ரஹத்தைப் பூரணமாகப்பெற்று இணைய தளம் மூலம் வைணவ உலகத்துக்கு ஒப்பாகும், மிக்காரும் இல்லா வகையில் தன்னலமற்ற பெரும் தொண்டு ஆற்றிவரும் ஸ்ரீ உ.வே. ஸுந்தர் கிடாம்பி ஸ்வாமி அவர்களுக்கு எங்கள் க்ருதஜ்ஞதையை ஸமர்ப்பிக்கின்றோம். இந்நூலுக்கு தேவையான ஸ்ரீ ஹயக்ரீவ அஷ்டோத்தரஶத நாமாவளி ஸ்தோத்ரத்தை ஸ்ரீ ஸ்வாமியின் இணையதளத்தில் இருந்து க்ரஹித்துக்கொண்டோம்.

ஸ்ரீ உ.வே. தேவநாதன் ஸ்வாமின் படைப்பான ஸ்ரீ தன்வந்தரி பகவானின் படம் இந்நூலை அலங்கரிக்கிறது. அவருடைய குடும்பத்தினருக்கு ஸ்ரீபரிமுகனின் கடாக்ஷம் என்றுமே உண்டு. அது மேன்மேலும் பெருகிவளர திவ்யதம்பதிகளின் திருவடிகளில் இறைஞ்சுகின்றோம்.

இந்நூலை வடிவமைத்துக் கொடுத்த ஸ்ரீமான் K. இளையராஜன், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மீ தம்பதிகளுக்கு ஸ்ரீ ஹயக்ரீவன் ஸகல ஸௌபாக்யங்களையும் அநுக்ரஹிக்க ப்ரார்த்திக்கின்றோம்.

இந்நூலை அச்சிட்டுக் கொடுத்த ஸ்ரீமான் K. ஸ்ரீதரன் (ஸ்ரீ மஹாலக்ஷ்மி அன் கோ), நெ.12/31, ஜுபிலி சாலை, சென்னை-33, அவர்கள் குடும்பத்திற்கு எம்பெருமான் கடாக்ஷம் என்றும் நிலைத்திருக்க ப்ரார்த்திக்கின்றோம்.

R.S. சாரி
விஷ்ணுப்ரியா சாரி

# ஸ்ரீ ஹயக்ரீவ ப்ரபாவம்

எம்பெருமான் "யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மனஸா ஸஹ" என்று வேதத்தால் கோஷிக்கப்படுவது போல கர்ம வஶ்யர்களாகிய நமது கண்ணிற்கு கட்டுண்டு புலப்படுபவன் அல்ல.

ஸ்ரீ விஷ்ணு லோகத்தில் பரவாஸுதேவனாக ஸேவை ஸாதித்து உய்வடைந்த ஆத்மாக்கள் கைங்கர்ய ஸ்ரீ பெற்றுத் திகழும் குழாமில் விளங்கிவரும் ஜனார்த்தன ஸ்ரூபம் ஸ்ரீ பரிமுகனே என்பது பரம ரஹஸ்யம். அவர் ஞான, பல, ஐஶ்வர்ய, வீர்ய, ஶக்தி, தேஜஸ் என்ற ஷாட்குண்ய பரிபூர்ணனாகவும், ஸத்யம், ஞானம், அநந்தம், ப்ரஹ்ம என்கிற ஸூத்ரவாக்ய ப்ரதிபாத்யனாகவும் விளங்கி யோக நித்ராபரனாக வ்யூஹ மூர்த்தியாய் விளங்கி, லீலா விபூதியை நிர்வஹிப்பது தொடங்கி, ஶாஸ்த்ரார்த்த தத்வ வ்யாக்யான தத்பரனாகவும் விளங்குகிறார்.

எந்த ஸ்வரூபமும், விபவ ஸ்வரூபமும் ஸ்ரீ பரிமுகனையே குறிக்கும். யுகந்தோறும் வடபத்ர ஶாயியாக ப்ரளய காலத்தில் தாம் மட்டும் எழுந்தருளி புனரபி முத்தொழிலும் புரிவது ஸ்ரீ பரிமுகனே எனப்படுகிறது. உலகில் ஜீவர்கள் யாவரும் அநுபவிக்கும் இலக்கியம், இலக்கணம், ஸ்வர வ்யஞ்ஜன எழுத்துகள், எண்கள், அலங்காரங்கள், ஶப்த ஶக்தி, இதிஹாஸம், புராணம், காவ்யம் யாவுமே வாக்தேவதையாகிய ஸ்ரீ ஹயக்ரீவனின் ஸ்வரூபம்.

எல்லா யாகங்களிலும் செய்யப்படும் யாக, யக்ஞாதி கர்மாக்கள், அவைகளில் உபயோகப்படுத்தப்படும் ஸாமக்ரியைகள் அந்த க்ரியை, கர்த்தா, போக்தா யாவுமே ஸ்ரீ பரிமுகன் எனப்படுகிறது. ப்ரஹ்மவித்யை எனப்படும் ஆத்ம வித்யையும் தாமே என்பதைக் கூறி ஶரணாகதி மார்க்கம் எவ்விதம் ஶ்ரேஷ்டமானது என்பதையும் கூறி, திருவாய்மொழியில் ஸ்ரீ ஸ்வாமி நம்மாழ்வார் தாம் கண்ட ஆத்மாநுபவத்தைக் கூறும் விவரங்களையும், பரிபூர்ண ப்ரம்மாநுபவம் என்கிற அத்யாயத்தில் ஸ்ரீ ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் ஸாதித்த விவரங்களையும் ப்ரமாணமானவையே என்று தம்மை அடையாளம் காட்டிய பரமன் கலிகாலத்தில் தாமே நேராகவும், ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனுக்கு காக்ஷி தந்து லாலாம்ருதமும் தந்தருளினார். வாக்ஸித்தி பெற்ற ஸ்ரீ ஸ்வாமி தேஶிகன், ஸ்ரீ பரிமுகன் முன்னிலையிலேயே ஸாதித்தது, "திஶந்துமே தேவ ! ஸதா த்வதீயா : தயாதரங்கா நுசரா கடாக்ஷா : ஶ்ரோத்ரேஷு பும்ஸாம் அம்ருதம் க்ஷரந்தீம் ஸரஸ்வதீம் ஸம்ஶ்ருத காமதேநும்" என்பதை. ஸ்ரீ பரிமுகனின் அருளால் அவரைக் குறித்த துதிகள் அவற்றிற்குரிய பலன்களை பெற்றுத் தந்தே தீரும் என்று தேறுகிறது.

இவ்வாறெல்லாம் நமக்கு தைர்யமூட்டிய ஸர்வ வல்லமை பெற்ற ஸ்ரீ பரிமுகனானவன், ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தை ஆழ்ந்த பக்தியுடன் பாராயணம் செய்யுங்கால் ஐஹிக, ஆமுஷ்மிக, மோக்ஷபர்யந்தமான ஸகல பலன்களையும் தட்டாமல் தந்தருள்வார் எனத் தைரியம் பெற்றுச் சேதனர்கள் நிலை பெறுவர்.

R.S. சாரி
விஷ்ணுப்ரியா சாரி



## பொருளடக்கம்          பக்கம்

1. ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட் – நூல்களின் விவரம், ஒலித்தகடுகளின் (Audio CD) விவரம் — v

2. Details about Shri Lakshmi Hayagriva Temple at Ramakrishna Nagar, Puducherry - 3 — 1

3. ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் – மூலம் (தமிழ்) — 7

4. ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் – எளிய விளக்கவுரை (தமிழ்) — 12

5. ஸ்ரீ அநந்தாஷ்டோத்தர ஶத நாமாவளி – முன்னுரை — 35

6. ஸ்ரீ அநந்தாஷ்டோத்தர ஶத நாமாவளி – மூலம் ஸம்ஸ்க்ருதம், தமிழ் — 36

7. ஸ்ரீ ஹயக்ரீவ அஷ்டோத்தர ஶத நாமாவளி – (தமிழ்) — 40

- புதுச்சேரி ராமகிருஷ்ணா நகர் ஸ்ரீ ஹயக்ரீவர் திருக்கோவில் பற்றிய குறிப்புகள் ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் குறித்த எளிய விளக்கவுரை

## ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்

### நூல்களின் விவரம்

1. ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஸஹஸ்ரநாமம் மூலம் (ஸம்ஸ்க்ருதம்)
2. ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் ஸஹஸ்ரநாமம் பதவிளக்கம்
3. ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ ரத்னமாலா
4. ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் மந்த்ரமாலிகா ஸ்தோத்ரம்
5. ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் (திவ்யதேஶங்களில் ஸேவிப்பது)
6. ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர மணிகள்
7. ஸ்ரீ ஹநுமத் விம்ஶதி (ஸ்ரீ லக்ஷ்மீ குமார தாததேஶிகன் அருளியது)
8. ஸ்ரீ ஸப்தமுகி ஹநுமத் கவசம்
9. ஸகல ஸித்தி தரும் கவசமும், ஸ்தோத்ரங்களும்
10. ஸ்ரீ பண்டரீபுர மஹாத்ம்யமும், ஸ்ரீ விட்டல ஸ்தோத்ரங்களும்
11. ஸ்ரீ ஆபத்துத்தாரக ராம ஸ்தோத்ரம்
12. ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்துதி
13. ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்தோத்ரங்கள்
14. ஸ்ரீ கோமளவல்லி ஸ்துதி ஶதகம்
15. மாங்கல்ய விவ்ருத்தி ஸ்தோத்ரம்
16. மங்களம் அருளும் மணிகள்
17. ஸ்ரீ தஶாவதார ஸ்தோத்ரம்
18. திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை
19. ஸ்ரீ கருட புராணம், அச்சுத ஸ்தோத்ரம்
20. நாராயண வர்ம எனும் ஸ்ரீ நாராயண கவசம்
21. ஸ்ரீ அம்ருத ஸஞ்ஜீவினி ஸ்தோத்ரம்
22. அபாமார்ஜன ஸ்தோத்ரம்
23. ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்கள்
24. ஸ்ரீ கோபால ஸஹஸ்ரநாமம்
25. கல்லிடைகுறிச்சி ஸ்ரீ ஆதிவராஹப்பெருமாள் க்ஷேத்ர மஹாத்ம்யம், ஸ்ரீ வராஹ ப்ரபாவம், ஸ்ரீ வராஹ உபநிஷத், ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்கள்

### ஒலித்தகடுகளின் (Audio CD) விவரம்

1. சில அபூர்வ ஸ்தோத்ரங்கள்
2. ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்கள்
3. ஸ்ரீமத் பகவத்கீதா 9வது அத்யாயம், 3வது "ஜிதந்தே" ஸ்தோத்ரம், ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண ஹ்ருதயம்
4. நாராயண வர்ம எனும் ஸ்ரீ நாராயண கவசம்
5. கருட புராண மஹாத்ம்யம், ஸ்ரீ அச்சுத ஸ்தோத்ரம்
6. ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம், ஆபத்துத்தாரக ராம ஸ்தோத்ரம்
7. ஸ்ரீ அம்ருத ஸஞ்ஜீவினி ஸ்தோத்ரம்
8. அபாமார்ஜன ஸ்தோத்ரம்
9. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸஹஸ்ரநாமம்
10. ஸ்ரீ கோபால ஸஹஸ்ரநாமம்
11. ஸ்ரீ அபீதிஸ்தவம்



Srimathe Ramanujaya Nama:
Srimathe Nigamanta Mahadesikaya Nama:

# SRI LAKSHMI HAYAGRIVA PERUMAL TEMPLE
## RAMAKRISHNA NAGAR, MUTHIALPET, PUDUCHERRY

**Our Country:**

Our Country holds a pre-eminent position in the world with its indomitable spiritual attainment and its people practising the qualities of dharma, tolerance, renunciation, austerity, contentment and other myriad virtuous qualities, however it might fare in the material front as compared to rest of the global countries. God has carved out our very country with the shape resembling a conch that symbolizes unwavering Gyana.

**Azhwars and Acharyas:**

In order to bring salvation to the mankind (jeevakotis), Lord Shriman Narayana had sent to *Bhoolokam*, the Aazhwars followed by the Acharyas to remain with the jeevakotis to help uddharanam or lifting of them from their earthly bondage.

**Swami Nigamanta Mahadesikan:**

In this background descended on earth Sri Swami Nigamanta Mahadesikan as Ghantavataram of Lord Shri Tiruvenkatamudaiyan in the year 1268 A.D. on a Purattasi Sravanam day, the day specially dedicated to Sri Tiruvenkatamudaiyan, the Lord of Tirumala.

Swami Nigamanta Mahadesikan was born in the village of Thuppul, a sub-urban of Kanchipuram and his childhood name was Venkatanathan. His parents were Sri Anantasuri (Anantacharya) and Srimati Totaramba and his Gotra was Viswamitra Gotra. Even as a child he was blessed by the great Sri Varadacharya (Nadathur Ammal). He became the disciple of his maternal uncle Sri Athreya Ramanuja (Kidambi Appullar). By the time the Swami attained the age of twenty he

had mastered all the arts. Many titles were conferred on him and his devotion and service to Lord Sriman Narayana was matchless. His literary works in Sanskrit and Tamil are *magnum opus* and by reciting his stotras and prabhandas with a deep sense of devotion one can feel nearness to the Lord. Not only Sri Swamy Desikan did preserve and fortify the tenets of Shri Swamy Bhagavad Ramanuja whom he revered beyond measure, but clarified and established beyond cavil the glorious doctrine of Mahaviswasam and Surrender unto the last – Sharanagati – Prapatti, the sure refuge for all. His greatest work in this regard has been Rahasya Traya Saram. Sat sampradayam did find in him a new lustre, the "Sri Emperumanar (Ramanujar) – Desika Darsanam".

Sri Swami Desikan attained Heavenly Abode in 1369 A.D. on the Avatara Nakshatram of his beloved Sri Tirumangai Aazhwar (Tirukartikai Nakshatramn of Kartikai month). Thus he lived for over one century, remaining as an embodiment of wisdom, detachment, devotion, humility and host of other noble qualities.

**Avatars of Lord Shriman Narayana:**

All pervading Lord Shriman Narayana, Himself had descended down in our Bharatam in physical form to leave message to the entire mankind through the Vedas, Itihasas and Puranas. While the Dasavatara prabhavam of the Lord is known to many, the Hayagriva Avataram which is quite unique by itself that symbolizes Gyana is yet to be understood by several people as the most ancient of all the Avatars, preceding even the Dasavataram. Hayagriva Avataram is also known as Hamsavataram.

**Shri Hayagriva Avataram:**

Shri Hayagriva is worshipped as the God of knowledge and wisdom, with a human shariram and a horse's Tirumukham, seated on a white lotus. The Lord has four lotus-like hands, with His front right hand in the mode of bestowing knowledge (Gyana Mudra); the front left hand holding books of wisdom, and the remaining two holding the Conch and Chakra. His beautiful Tirumeni is in a white, bright, radiant, crystal-like form emitting resplendent nectar (Amrit) – like rays of Gyana.

In colloquial terms the horse is known for its speed, strength and intelligence. This Avataram is hailed as the Avataram taken by the Lord for rescuing the Vedas from the demons Madhu and Kaitabha and imparting knowledge to Brahma, to help Brahma carry on his duty of Srushti. Symbolically, the sequence of these happenings also represents the triumph of pure knowledge, guided by the graceful Lord, over the demonic forces of passion and darkness. Shri Hayagriva is one



ஸ்ரீ கள்வன்
ஸ்ரீ கோமளவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீ யதோக்தகாரி ஸந்நிதி
திருவெஃகா, காஞ்சிபுரம்
(திருமங்கையாழ்வார் மங்களாஶாஸனம்)


ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
தன்வந்தரயே
அம்ருதகலஶ ஹஸ்தாய
ஸர்வாமய விநாஶநாய
த்ரைலோக்யநாதாய
ஸ்ரீ மஹாவிஷ்ணவே நம:
LORD DHANWANTHARI
Deva

of the prominent deities in Shri Vaishnava tradition. His blessings are sought at the beginning of initiation to Vidya covering both ancient (Vedic) and modern (worldly) subjects. Special worship for the Lord is conducted on His Avatara Dinam, which falls on Aavani Tiruvonam and on Mahanavami, the ninth day of the Navaratri festival.

While the other Avatars were taken with specific purposes at the end of which Lord Shriman Narayana had assumed His Paravasudeva Swarupam in Shrivaikuntham again, the Hayagriva Avataram alone is unique, which is perpetual through all the Manvantarams, Maha Yugas, Yugas and also the times to come, for ever and ever, as His Task (of imparting wisdom) never ceases. It is in the form of Shri Lakshmi Hayagriva He is seen in His Paravasudeva Swarupam, as in Shrivaikuntham.

**Hayagriva Stotram:**

Very great and stupendous works of Sri Nigamanta Mahadesika include 28 *Stotranis* commencing with Sri Hayagriva Stotram consisting of 33 shlokas. By reciting this Stotram with a deep sense of devotion one shall be blessed with *Gyana* (wisdom), *Bhakti* (love towards Acharyas, Azhwars and Shriman Narayana), *Aiswaryam* (eternal wealth), *Arogyam* (health) and *Ayush* (longevity of life).

The Dhyana Shloka of Hayagriva Stotram which is quite popular among the devotees, commences like this:

*"Jyanananda mayam Devam nirmala sphatikakrutim
Adharam sarva vidyanam Hayagrivam upasmahe"*

By chanting incessantly the Hayagriva Mantra taught to him by sakshat Sri Garuda Bhagavan, Swami Desikan was blessed with the sakshatkaram of Lord Shri Hayagriva, in Aushadagiri, Tiruvahindrapuram. Lord Shri Hayagriva appeared before Shri Swami Desikan and assumed the present Archa Swarupam of Shri Hayagriva, the form in which he is being worshipped in the temples.

**Puducherry Shri Ramakrishna Temple:**

When Lord Shri Anjaneya carried the Aushada Parvatam to Lanka to save Shri Lakshmana, it is believed that certain portion of it had fallen in Tiruvahindrapuram, Puducherry Ramakrishnapuram, Chettipunyam, Nanganallur and Villivakkam (Manimandapam) where the Lord has blissfully got His temples consecrated.

The Hayagriva temple at Puducherry was consecrated on 05-07-1971,

in a very modest form, structurally.

His Archa Swarupam in Puducherry is absolutely unique in many aspects. Here Hayagriva dwells in Hayagriva swarupam in all Pancha Beram, Moolavar, Utsavar, Yaga Berar, Koutuka Berar and Tirtha Berar.

Shri Rama with His consort and Parivar, Shri Navanita Krishna and Vatapatra (Aalilai) Krishna, Shri Sudarshana Azhwar, Shri Vishwaksenar, Azhwars, Acharyas of different Sampradayas – all adorn the temple to sanctify the temple for ever.

Sri 45th Jeer of Sri Ahobila Matham Sri Laksmi Nrisimha Divya Paduka Sevaka Srivansatakopa Sri Narayana Yatindra Mahadesikan, Sri Tirukkudandai Srimad Andavan (Periyasramam), Srimushnam Srimad Andavan (Srirangam) are the Acharyas who have sanctified the temple with their Mangalasasanam of Emperuman Sri Hayagriva.

Nityotsavam, Pakshotsavam, Masotsavam and Varshika Utsavam, especially the Pavitrotsavam and Shri Brahmotsavam are performed in strict adherence to shastras.

All main Utsavas relating to Emperuman Shriman Narayana, viz. Shri Hayagriva Jayanti, Shri Nrisimha Jayanti, Shri Varaha Jayanti, Shri Rama Navami, Shri Krishna Jayanti and many other utsavas and also the Tirunakshatra vaibhavas of Azhwars and Acharyas, are performed in all sincerity and reverence in absolute fervour. In view of this, the Prabhavam of this temple is ever on the increase and the Kataksha visesham of the Lord is ever growing.

The opulent Anugraham of the Lord is obvious, as students across the globe who come and pray to this Lord are being blessed with meritorious academic achievements & records and professional excellence. Many score very high marks in their university examinations and get easy admissions for higher studies and many do get even medical seats.

As a result of the deep sense of devotion of the Bhaktas, the building adjacent to the temple has also come to the possession of the Temple where the Utsavar is seated majestically. In this annexe building is performed all daily pujas and utsavas. The temple itself has been blessed with an excellent face-lift with the Mulasthanam (Garbhagriham) and the Dwajastambham having been plated in gold and emit golden radiance, drenching the devotees in an atmosphere of tranquillity. The Utsavar also is being adorned in a Golden Simhasana. Many vahanas and the chariot in which the Lord is seated and taken out majestically on procession during the utsava days glitter. Recently Dharmati Peetam, a rare Peetham for the Lord in an exquisite form is

dedicated to Him. The Murthi of Shri Dhanvantari Bhagavan has been consecrated in the temple to help relieve the devotees undergoing physical sufferings / health set-back.

As per His Divine Ordain (Command), Nava Nrisimha Murtis of Ahobilam, viz. Jwala, Ahobila, Malola, Kroda, Karancha, Bhargava, Yogananda, Chhatravata and Paavana have been consecrated in the upstairs of the temple premises and the Murti of Panakala Nrisimha Swami of Mangalagiri has also joined the Nava Nrisimhas to make them Dasa Nrisimhas, thereby making it possible for the devotees to have the Darshan of all the ten Nrisimhas in one single sthalam. On every Swati Nakshatram, special pujas and also Homam are being performed for the Nrisimha Swami.

To invoke the blessings of the respective Deities, Japam is being performed every day in the evening / night by reciting selective scripts from Ancient Puranas / Stotra Pathas as per details given below and after performing the Japam, Tirtha Prasadam is distributed to the devotees present in the temple, late in the nights. If available the Tirtham is distributed to the devotees the next day too.

**Details of Japas performed:**

| | | |
|---|---|---|
| Monday | : | Shri Narayana Kavacham and Shri Akshaya Gopala Kavacham. |
| Tuesday | : | Shri Sudarshana Kavacham. |
| Wednesday | : | Shri Amrita Sanjivini Stotram. |
| Thursday | : | Shri Stuti and Shri Hayagriva Stotram of Swami Sri Nigamanta Mahadesikan |
| Friday | : | Shri Lakshmi Narayana Hrudayam. |
| Saturday | : | Shri Varaha Kavacham. |
| Sunday | : | Shri Apamarjana Stotram |

This unique feature is practised in the temple for the benefit of the devotees. In view of these Japas the entire temple remains vibrant. Many do feel the excellent vibration that prevail in the temple.

Sri Lakshmi Saras Maruti Trust, the trust associated with the temple, brings out books / booklets and CDs on many Stotras, Sahasranamams, Sahasranam avalis and select suktis of Shri Swami Desikan

For the benefit of the devotees, detailed list of the books / booklets / CDs published by the Trust has been given in this book.

The Temple Management is desirous of expanding its activities in a routine and systematic manner.

The Temple Management pray at the Lotus feet of the Lord for invoking His blessings on the devotees who come to Him so that they are blessed with good health, eternal prosperity, peace, longevity of life and ever-growing Bhakti towards the Lord for themselves and their posterity.

**Details of various Utsavas:**

Shri Varaha Jayanti

Shri Nrisimha Jayanti

Shri Ramanavami

Shri Hayagriva Jayanti

Shri Laksmi Kumara Daadayarya Swami Jayanti

Shri Swami Desikan Avatara Utsavam

Shri Navaratri Utsavam

Shri Pavitrotsavam – Maha Purnahuti on Aani Anusham the founding day of the Temple

Shri Brahmotsavam – Tirthavari on Avani Shravanam day.

**Temple timings:**

From 08.30 a.m to 12.00 Noon

From 06.30 p.m to 10.00 p.m

(Above timings are applicable to all week days, Saturdays, Sundays, holidays and Utsava days. On utsava days the morning timing could get a little advanced)

Contact Person : Shri Kannan

Mobile No. : 90954 28302

Sri Emperumanar Desikan Tiruvadigale Saranam

Shubhamastu



ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம்

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||

ஜ்ஞானாநந்த3மயம் தே3வம் நிர்மலஸ்படிகாக்ருதிம் |
ஆதா4ரம் ஸர்வ வித்3யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே || 1

ஸ்வதஸ்ஸித்3த4ம் ஶுத்3த4ஸ்ப்ப2டிக மணிபூ4ப்4ருத் ப்ரதிப4டம்
ஸுதா4 ஸத்4ரீசீபி4ர்த்3யுதிபி4ரவதா3த த்ரிபு4வநம் |
அநந்தைஸ்த்ரய்யந்தை ரநுவிஹித ஹேஷாஹலஹலம்
ஹதாஶேஷாவத்3யம் ஹயவத3நமீடீ3மஹி மஹ: || 2

ஸமாஹாரஸ்ஸாம்நாம் ப்ரதிபத3ம்ருசாம் தா4ம யஜுஷாம்
லய: ப்ரத்யூஹாநாம் லஹரிவிததிர் போ3தஜலதே4: |
கதா2த3ர்ப்பக்ஷுப்4யத்க த2ககுல கோலாஹலப4வம்
ஹரத்வந்தர்த்4வாந்தம் ஹயவத3ந ஹேஷாஹலஹல: || 3

ப்ராசீ ஸந்த்4யா காசித3ந்தர் நிஶாயா:
ப்ரஜ்ஞாத்3ருஷ்டேரஞ்ஜந ஶ்ரீரபூர்வா |
வக்த்ரீ வேதா3ந் பா4து மே வாஜிவக்த்ரா
வாகீ3ஶாக்2யா வாஸுதே3வஸ்ய மூர்த்தி: || 4

விஶுத்3த4 விஜ்ஞாந க4நஸ்வரூபம்
விஜ்ஞாந விஶ்ராணந பத்3த4தீ3க்ஷம் |
தயாநிதி4ம் தே3ஹப்4ருதாம் ஶரண்யம்
தே3வம் ஹயக்3ரீவமஹம் ப்ரபத்3யே || 5

அபௌருஷேயைரபி வாக்ப்ரபஞ்சை:
அத்3யாபி தே பூ4திமத்ருஷ்டபாராம் |
ஸ்துவந்நஹம் முக்3த4 இதி த்வயைவ
காருண்யதோ நாத2 கடாணீய: || 6

தா3க்ஷிண்யரம்யா கி3ரிஶஸ்ய மூர்த்தி:
தே3வீ ஸரோஜாஸந த4ர்மபத்நீ |
வ்யாஸாத3யோऽபி வ்யபதே3ஶ்ய வாச:
ஸ்பு2ரந்தி ஸர்வே தவ ஶக்திலேஶை: || 7

மந்தோ3ऽப4விஷ்யந்நியதம் விரிஞ்சோ
வாசாம்நிதே4 வஞ்சித பா4க3தே4ய: |
தை3த்யாபநீதாந் த3யயைவ பூ4யோऽபி
அத்4யாபயிஷ்யோ நிக3மாந் நசேத் த்வம் || 8

விதர்க்க டோ3லாம் வ்யவதூ4ய ஸத்வே
ப்3ருஹஸ்பதிம் வர்த்தயஸே யதஸ்த்வம் |
தேநைவ தே3வ த்ரித3ஶேஶ்வராணாம்
அஸ்ப்ருஷ்ட டோ3லா யிதமாதி4ராஜ்யம் || 9

அக்3நௌ ஸமித்3தா4ர்ச்சிஷி ஸப்ததந்தோ:
ஆதஸ்த்தி2வாந் மந்த்ரமயம் ஶரீரம் |
அக2ண்ட3 ஸாரைர்ஹவிஷாம் ப்ரதா3நை:
ஆப்யாயநம் வ்யோமஸதா3ம் வித4த்ஸே || 10

யந்மூலமீத்3ருக் ப்ரதிபா4தி தத்வம்
யா மூலமாம்நாய மஹாத்3ருமாணாம் |
தத்வேந ஜாநந்தி விஶுத்3த4ஸத்வா:
த்வாமக்ஷராமக்ஷரமாத்ருகாம் தே || 11

அவ்யாக்ருதாத்3 வ்யாக்ருதவாநஸி த்வம்
நாமாநி ரூபாணி ச யாநி பூர்வம் |
ஶம்ஸந்தி தேஷாம் சரமாம் ப்ரதிஷ்ட்டா2ம்
வாகீ3ஶ்வர! த்வாம் த்வது3பஜ்ஞவாச: || 12

முக்தே4ந்து நிஷ்யந்த3 விலோப4நீயாம்
மூர்த்திம் தவாநந்த3 ஸுதா4ப்ரஸூதிம் |
விபஶ்சிதஶ்சேதஸி பா4வயந்தே
வேலாமுதா3ராமிவ துக்த4ஸிந்தோ4: || 13

மநோக3தம் பஶ்யதி ய: ஸதா3 த்வாம்
மநீஷிணாம் மாநஸ ராஜஹம்ஸம் |
ஸ்வயம் புரோபா4வ விவாத3 பா4ஜ:
கிங்குர்வதே தஸ்ய கி3ரோ யதா2ர்ஹம் || 14

அபி க்ஷணார்த்த4ம் கலயந்தி யே த்வாம்
ஆப்லாவயந்தம் விஶதை3ர்மயூகை2: |
வாசாம் ப்ரவாஹை ரநிவாரிதைஸ்தே
மந்தா3கிநீம் மந்த3யிதும் க்ஷமந்தே || 15

ஸ்வாமிந்! ப4வத்3 த்4யான ஸுதாபி4ஷேகாத்
வஹந்தி த4ந்யா: பு2லகாநுப3ந்த4ம் |
அலக்ஷிதே க்வாபி நிரூட4மூலம்
அங்கே3ஷ்விவாநந்த3து2ம் அங்குரந்தம் || 16

ஸ்வாமிந்! ப்ரதீசா ஹ்ருத3யேந த4ந்யா:
த்வத்3 த்4யாந சந்த்ரோத3ய வர்த்த4மாநம் |
அமாந்தமாநந்த3 பயோதி4மந்த:
பயோபி4ரக்ஷ்ணாம் பரிவாஹயந்தி || 17

ஸ்வைராநுபா4வாஸ்த்வத3தீ4ந பா4வா:
ஸம்ருத்3த4வீர்யாஸ் த்வத3நுக்3ரஹேண |
விபஶ்சிதோ நாத2! தரந்தி மாயாம்
வைஹாரிகீம் மோஹநபிஞ்சி2காம் தே || 18

ப்ராங்நிர்மிதாநாம் தபஸாம் விபாகா:
ப்ரத்யக்3ர நிஶ்ரேயஸ ஸம்பதோ3 மே |
ஸமேதி4ஷீரம்ஸ்தவ பாத3பத்3மே
ஸங்கல்ப சிந்தாமணய: ப்ரணாமா: || 19

விலுப்த மூர்த்த4ந்ய லிபிக்ரமாணாம்
ஸுரேந்த்3ர சூடா3பத3 லாலிதாநாம் |
த்வதங்க்4ரி ராஜீவ ரஜ: கணாநாம்
பூ4யாந் ப்ரஸாதோ3 மயி நாத2! பூ4யாத் || 20

பரிஸ்ப்பு2ரந் நூபுர சித்ரபா4நு
ப்ரகாஶ நிர்த்தூ4த தமோநுஷங்கா3ம் |
பத3த்3வயீம் தே பரிசிந்மஹே\u200cந்த:
ப்ரபோ3த4ராஜீவ விபா4த ஸந்த்4யாம் || 21

த்வத்கிங்கரா லங்கரணோசிதாநாம்
த்வயைவ கல்பாந்தர பாலிதாநாம் |
மஞ்ஜுப்ரணாத3ம் மணிநூபுரம் தே
மஞ்ஜூஷிகாம் வேத3கி3ராம் ப்ரதீம: || 22

ஸஞ்சிந்தயாமி ப்ரதிபா4த3ஶாஸ்தா2ந்
ஸந்து4க்ஷயந்தம் ஸமய ப்ரதீ3பாந் |
விஜ்ஞாந கல்ப த்3ரும பல்லவாப4ம்
வ்யாக்2யாந முத்3ரா மது4ரம் கரம் தே || 23

சித்தே கரோமி ஸ்ப்பு2ரிதாக்ஷமாலம்
ஸவ்யேதரம் நாத2! கரம் த்வதீ3யம் |
ஜ்ஞாநாம்ருதோத3ஞ்சந லம்படாநாம்
லீலா க4டீயந்த்ர மிவாஶ்ரிதாநாம் || 24

ப்ரபோ3த4 ஸிந்தோ4ரருணை: ப்ரகாஶை:
ப்ரவால ஸங்கா4த மிவோத்3வஹந்தம் |
விபா4வயே தே3வ! ஸபுஸ்தகம்தே
வாமம் கரம் த3க்ஷிணமாஶ்ரிதாநாம் || 25

தமாம்ஸி பி4த்வா விஶதை3ர்மயூகை2:
ஸம்ப்ரீணயந்தம் விது3ஷஶ்சகோராந் |
நிஶாமயே த்வாம் நவபுண்ட3ரீகே
ஶரத்3க4நே சந்த்3ரமிவ ஸ்பு2ரந்தம் || 26

தி3ஶந்து மே தே3வ! ஸதா3 த்வதீ3யா:
த3யாதரங்கா3 நுசரா: கடாக்ஷா: |
ஶ்ரோத்ரேஷு பும்ஸாமம்ருதம் க்ஷரந்தீம்
ஸரஸ்வதீம் ஸம்ஶ்ரித காமதே4நும் || 27

விஶேஷ வித்பாரிஷ தே3ஷு நாத2!
விதக்3த4 கோ3ஷ்டீ ஸமராங்க3ணேஷு |
ஜிகீ3ஷதோ மே கவிதார்க்கி கேந்த்3ராந்
ஜிஹ்வாக்3ர ஸிம்ஹாஸநமப்4யுபேயா: || 28

த்வாம் சிந்தயந் த்வந்மயதாம் ப்ரபந்ந:
த்வாமுத்3க்3ருணந் ஶப்த3மயேந தா3ம்நா |
ஸ்வாமிந்! ஸமாஜேஷு ஸமேதி4ஷீய
ஸ்வச்ச2ந்த3 வாதா3ஹவ பத்3த4ஶூர: || 29

நாநாவிதா4நா மக3தி: கலாநாம்
நசாபி தீர்த்தே2ஷு க்ருதாவதார: |
த்4ருவம் தவாநாத2 பரிக்3ரஹாயா:
நவம் நவம் பாத்ரமஹம் த3யாயா: || 30

அகம்பநீயாந் யபநீதி பே4தை3:
அலங்க்ருஷீரந் ஹ்ருத3யம் மதீ3யம் |
ஶங்கா களங்கா பக3மோஜ்வலாநி
தத்வாநி ஸம்யஞ்சி தவ ப்ரஸாதா3த் || 31

வ்யாக்2யா முத்3ராம் கரஸரஸிஜை: புஸ்தகம் ஶங்க2சக்ரே
பி3ப்4ரத்3பி4ந்த ஸ்ப2டிகருசிரே புண்ட3ரீகே நிஷண்ண: |
அம்லாநஶ்ரீ ரம்ருத விஶதை3 ரம்ஶுபி4: ப்லாவயந்மாம்
ஆவிர்பூ4யா த3நக4 மஹிமா மாநஸே வாக3தீ4ஶ: || 32

வாக3ர்த்த2 ஸித்3தி4ஹேதோ:
பட2த ஹயக்3ரீவ ஸம்ஸ்துதிம் ப4க்த்யா |
கவிதார்க்கிக கேஸரிணா
வேங்கடநாதே2ந விரசிதா மேதாம் || 33

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாணகு3ண ஶாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதா3ந்த கு3ரவே நம: ||

ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் எளிய விளக்கவுரை

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||

1 ஜ்ஞானாநந்த3மயம் தே3வம் நிர்மலஸ்படிகாக்ருதிம் |
ஆதா4ரம் ஸர்வ வித்3யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ||

"ஸத்யம், ஞானம், அநந்தம், ப்ரம்மா" என்கிற ஸு4த்ர வாக்யத்தின் பொருள் விளங்குவதாக ஞானத்தின், ஆநந்தத்தின் இருப்பிடமாக பரிமுகனைத் துதிக்கத் துவங்குகிறார்.

ஞானம் என்பது சேதனனைப் பொருத்திய ஆத்ம ஞானம் மட்டிற்குமன்றி வேத வேதாந்த தத்துவ ஞானத்திற்குமான பூரண வடிவானவர் ஸ்ரீ ஹயக்ரீவன் என்பதே !

ஸ்ரீ மஹாபாரதம் ஶாந்தி பர்வத்தில்

"ஞானாத் மகாந் ஸம்யமினோ
பஶ்யந்தி நித்யம் புருஷம்" - என ஞானத்தின் க4ன ஸ்வரூபமாகப் பரமனைப் போற்றுகிறது. "ஆநந்தோ ப்ரம்மே திவ்ய ஜாநாத்" - என ப்ருகுவல்லி கோஷிப்பது போல, துக்கக் கலப்பற்ற நித்யாநந்த ஸ்வரூபியான பரிமுகன் சேதனர்களுக்கும், இழிதல்

இல்லா நித்யானந்தத்தை அருள்பவரும் கூட. ஆக, பரிமுகன் ஞான ஆநந்தத்தின் பூரண ஸ்வரூபி. தேவம் என்பது தேவருக்கும், நித்யஸூரிகளுக்கும், திவ்ய ஸூரிகளுக்கும் பரவாஸுதேவனாக, தலைவனாக, தமதனைத்தும் அவர்கட்கு வழங்கி தாம் பூரணத்வம் பெற்று விளங்கும் தேவாதிதேவ திவ்ய ஸ்வரூபம். அவர் குணங்களில் மட்டும் விமலன், நிமலன் என்பதல்லாமல் ஸ்படிகத்தைப் போன்ற, கசடு லேஶம் இல்லாத நிர்மல ஸ்வரூபன். வேதத்தின், ஞானத்தின் பிறப்பிடமாதலின் தன்னை உபாஸிக்கும் சேதனனுக்கு ஸ்ரீ வித்யை என்கிற ஆத்மவித்யையுடன் ப்ரேயஸ் என்ற ப்ராக்ருத (இவ்வுலக) ஸம்பந்தமுள்ள கல்வியையும், கலைகளையும் பூர்ணமாய் அநுக்ரஹிப்பவர். இத்தகைய வரங்களையும், மோக்ஷபர்யந்தமான பலன்களையும் தடையின்றி அருளும் ஸ்ரீ ஹயவதன ஸ்வரூபனை உபாஸனை செய்கிறோம்.

2 ஸ்வதஸ்ஸித்3த4ம் ஶுத்3த4ஸ்ப்ப2டிக மணிபூ4ப்4ருத் ப்ரதிப4டம்
ஸுதா4 ஸத்4ரீசீபி4ர்த்3யுதிபி4ரவதா3த த்ரிபு4வநம் |
அநந்தைஸ்த்ரய்யந்தை ரநுவிஹித ஹேஷாஹலஹலம்
ஹதாஶேஷாவத்3யம் ஹயவத3நமீடே3மஹி மஹ: ||

எம்பெருமான் ஜீவர்களைப் போல கர்மவஶ்யர் அல்லர். அவரவர் பாப, புண்ணியத்திற்கேற்ப ஜீவனுடைய பிறவிகள் ஏற்படுகின்றன. கீதையிலும் கண்ணன் எதிர்தரப்பில் உள்ள பந்துக்கள், பெரியோர்கள், குரு இவர்களைக் கண்டு அர்ஜுனன் பாரதப் போர்புரிய மனமின்றி மயங்கியபோது "அர்ஜுனா ! இவர்கள் உன்னவர்கள் என நினைக்காதே - நான் என் பிறவிகளை அறிவேன். உன் பிறவிகளை நீ அறிய மாட்டாய்" - என ஸாதிக்கிறார். ஜீவர்களின் ரக்ஷணத்திற்காகக் குறிப்பிட்ட ஸங்கல்பம் கொண்டு எம்பெருமான் தானே அவதாரம் புரிகின்றார். கர்ம வஶப்பட்டு அவர் பிறவி எடுப்பதில்லை. "ஶுத்த ஸ்படிக மணி பூப்ருத் பிரதிபடம்"- மாஶற்ற ஸ்படிக மணியின் மாலை போன்ற தூய வெண்மையான திருமேனியை தரித்துக் கொண்டார். ஸ்வ ஸங்கல்பத்தால் அவர் கொண்ட வெண்மை நிறத்தின் ஒளி அமுதம் போன்று மூவுலகையும் மாசற்றதாய்ச் செய்து கொண்டிருக்கிறது. வேதங்களின் உட்பொருட்களை அறிவது ஸாத்யமான செயல் அன்று. ஆயினும்

வேத ஶப்தமாக ஒலிக்கக்கூடிய 'ஹலஹல" ஶப்தம், வேதங்களின் அங்கமாய் குதிரையின் கனைப்பு போன்று பொருத்தமாகவே ஒலித்துச் சேதனர்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளை வேரறுப்பதாய் உள்ளது. மேலும் குதிரையின் முகத்தில் மஹாலக்ஷ்மி வாஸம் செய்கிறாள் என்பது ப்ரமாணம். ஆக குதிரை முகம் கொண்டு ஸ்வாமி செய்யும் ஹலஹல த்வனி நம் தீமை யாவற்றையும் நீக்கி மோக்ஷ பர்யந்தமான பலன்களை அளிக்கவல்லது என்பதே தேறுகின்ற உண்மை. க்ரீக் புராணங்கள் கூட குதிரை முகத்தை அறிவின் கூர்மைக்கு இருப்பிடமாகக் கூறுவதும் கொள்ளத்தக்க விஷயம். ஸந்தேஹத்திற்கு இடமளிக்காத ப்ரமாணிக்யமான கூற்றுக்களை, ஆங்கிலத்தில் *"To hear from the horse's mouth"* என்கிறார்கள்.

3 ஸமாஹாரஸ்ஸாம்நாம் ப்ரதிபத³ம்ருசாம் தா⁴ம யஜுஷாம்
லய: ப்ரத்யூஹாநாம் லஹரிவிததிர் போ³தஜலதே⁴: |
கதா²த³ர்ப்பக்ஷுப்⁴யத்க த²ககுல கோலாஹலப⁴வம்
ஹரத்வந்தர்த்⁴வாந்தம் ஹயவத³ந ஹேஷாஹலஹல: ||

ஸ்ரீ ஹயக்ரீவனுடைய "ஹலஹல" என ஒலிக்கும் த்வனி கடலின் அலைபோன்று வேதகோஷமாய்த் திகழ்ந்து மேன்மை உடைத்தானதாக விளங்குகிறது. மக்களுக்கு எப்படி இருவித பயன்களை அளிக்கிறது என மூன்றாவது ஸ்லோகம் விவரிக்கின்றது. ருக் வேதத்திற்கும் ஸாம வேதத்திற்கும் சொற்கள் பொதுவானவையே. ஆயினும் ஸ்வர பேதத்தால் ருக்வேதம், ஸாம வேதமாகவும் ஒலிக்கின்றது. பொருள் வெவ்வேறாகக் கடலை ஒத்து விரிவாகவும் உள்ளது. ஸ்ரீ ஹயக்ரீவனுடைய "ஹலஹல" என்ற ஹேஷா ஶப்தம் ருக் வேதத்தின் மூலக் கருவாய், ஸாம வேதத்தின் உட்பொருளாய் யஜுர் வேதத்தின் உறைவிடமாய் விளங்குகிறது. சரியான பொருள் விளங்கவும், அதில் ஏற்படக்கூடிய தடைகளின் அழிவிற்குக் காரணமாயும் உள்ளது. இந்த ஞானக்கடலின் அலைவரிசை, இதர குத்ருஷ்டிகளின் மதவாதங்களை அழிக்க வல்லதாயும், கல்வி கற்கும் ஜீவர்களுக்கு மூன்று வேதங்களின் ஸாரமாய் விளங்கி, கல்வியில் ஏற்படக்கூடிய தடைகளை நீக்கி, அறிவுத்திறன் ஒளிபெறச் செய்யும் வல்லமையுடையதாயும், குத்ருஷ்டிகளின் தவறான ஆரவாரங்களை

நசிக்கச் செய்வதாயும் உள்ளது. இவ்வித மேன்மைகள் பொருந்திய ஸ்ரீ ஹயக்ரீவனின் ஹேஷா ஶப்தம் மக்களின் அஜ்ஞான இருளை அறவே போக்குவதாக !

4 ப்ராசீ ஸந்த்⁴யா காசித³ந்தர் நிஶாயா:
ப்ரஜ்ஞாத்³ருஷ்டேரஞ்ஜந ஶ்ரீரபூர்வா |
வக்த்ரீ வேதா³ந் பா⁴து மே வாஜிவக்த்ரா
வாகீ³ஶாக்²யா வாஸுதே³வஸ்ய மூர்த்தி: ||

"ப்ராசீ ஸந்த்யா" - மையிருள் பரவி நிற்கும் இரவு அகல கிழக்கில் ஸூர்யன் உதித்து பூர்ணமாக ப்ரகாஶமடையச் செய்கிறான், "கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்" எனத் தொண்டரடிப் பொடியாழ்வார் ஸாதிப்பதைப்போல. ஸ்ரீ ஹயக்ரீவனோ யெனில் சேதனின் அஜ்ஞானம் எனும் உள் இரவை அகற்றும் அற்புதமான ஸூர்யனாய், கீழை (காசித்) விடியலாய் விளங்கி அருள்கிறார். எப்படியெனில், தெளியாத மறை நிலங்களைத் தெளிவிக்கும் அஞ்சனம் (மை) போன்று, வேதங்களின் பொருள் உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்கும்படிச் செய்கிறார். குதிரை முகம் கொண்டு கல்விக் கடவுளாய் விளங்கி கல்விச் செல்வத்தை, தன்னை உபாஸிப்பவர்களுக்கு வாரி வழங்குகிறார். எந்த ஒரு உண்மையும் உசிதமான அதிகாரி வாயிலாகவே ஏற்கப்படும். "வந்தான் எடுத்தான் முடித்தான்" - எனப்படுவது போல வேதங்களை மீட்டதுடன் மிகச் சுருக்கமான முறையில் பிரமனுக்கு உபதேஶமும் செய்து துரிதமாகத் தன் அவதார காரியத்தை முடித்துக் கொண்டான் பரிமுகன். ஆங்கிலத்தில் "Vini vidivisi" என்பார்கள். விரிவான பூர்ண அவதாரமில்லாமையால் பரிமுகனாக வந்து அஜ்ஞான இருளைப் போக்கியது யாரோ என நினைத்து மயங்க வேண்டாம் என்பதற்காக ஸ்வாமி தேஶிகன் வாகீஶன் எனப்படும் பரிமுகன் ஸாக்ஷாத் பரவாஸுதேவனே எனக் கூறி வேதார்த்தங்கள் தெளிவடைய அவரே பூர்ணமான அதிகாரி என ஸாதித்துள்ளார். அப்பேர்ப்பட்ட ஸ்ரீ ஹயக்ரீவன் என்முன் தோன்றியருளட்டும் என ஸாதித்தருளுகிறார்.

5 விஶுத்³த⁴ விஜ்ஞாந க⁴நஸ்வரூபம்
விஜ்ஞாந விஶ்ராணந பத்³த⁴தீ³க்ஷம் |
தயாநிதி⁴ம் தே³ஹப்⁴ருதாம் ஶரண்யம்
தே³வம் ஹயக்³ரீவமஹம் ப்ரபத்³யே ||

முன் ஶ்லோகத்தில் வேதார்த்தங்களை எம்பெருமான் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தந்தருள்வது குறிப்பிடப்பட்டது. இங்கு ஸ்ரீ ஹயவதனப் பெருமானின் ஸ்வரூவமே ஶுத்தமான ஞானத்தின் ஆத்மாவாகத் பரிபூர்ணமான ஞானத்தின் மொத்த ஸ்வரூபமாகக் கூறப்படுகிறது. தம்மை உபாஸிப்பவர்க்கு விஶேஷமான ஞானத்தைத் தந்தருளும் விரதம் பூண்டவன் ஸ்ரீ ஹயக்ரீவன். தேடித்தேடி அலைந்து, அத்யயனம் செய்து, மூத்தோரிடம் காலக்ஷேபம் கேட்டுத் தெளியவேண்டிய ஞானம், ஸ்வாமியை தியானிப்பதால் மட்டுமே வலிய கிடைத்துவிடுகிறது. ஏனென்றால் அவர் கருணைக்கு உறைவிடமானவர். எல்லா உயிரினங்களுக்கும் அடைக்கலமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானை அடியேன் ஶரணடைகின்றேன் என்கிறார் ஸ்வாமி தேஶிகன்.

6 அபௌருஷேயைரபி வாக்ப்ரபஞ்சை:
அத்³யாபி தே பூ⁴திமத்ருஷ்டபாராம் |
ஸ்துவந்நஹம் முக்³த⁴ இதி த்வயைவ
காருண்யதோ நாத² கடாக்ஷணீய: ||

இதிஹாஸ புராணங்கள், ப்ரபந்த, க்ரந்த, காவ்ய, ஸாஹித்யங்கள் முதலானயாவும் இந்த ப்ரக்ருதியில் தோன்றிய புண்ணியர்களால் இயற்றப்படுவது. "அபௌருஷமானது, அநாதியானது, ப்ரமாணிக்யமானது, எல்லையற்றது" என்றால் அது வேதம்தான். ஆனால் எல்லையற்ற வேதஸ்வரூபமாகிய பரமனின் ஸ்வரூபம், குணங்கள் இவை வேதங்களின் கணிப்பிற்கும் அப்பாற்பட்டது. "யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ"– என்கிறபடி எம்பெருமானின் குணபூர்த்தியின் எல்லையைக் காண இயலாது. அப்படிப்பட்ட அஸாத்யமான முயற்சியும் கூட ஸ்ரீ பரிமுகனின் எல்லையற்ற கருணா கடாக்ஷ விஶேஷத்தால்

ஸபலமாகும் என ஸாதிக்கிறார். எல்லையற்ற ஸ்ரீ ஹயக்ரீவனின் ப்ரபாவத்தை அறியாப்பிள்ளையாகிய நான் துதிக்க முற்பட்டாலும் ஸ்ரீ ஹயக்ரீவனின் கடாக்ஷ விஶேஷத்தால் அது ஸபலமாகும் என்று ஸ்வாமி நைச்சியானுஸந்தானத்தில் பேசுகிறார். நம் போன்ற சேதனர்கள் தாமாக துதிக்க இயலாவிடினும் நம் ஆசார்ய ஸார்வபௌமர் ஸாதித்த இந்த துதியை ஶ்ரத்தையுடன் பாராயணம் செய்தால் பரிமுகனின் பரிவிற்கும் கருணைக்கும் பாத்திரர்களாகி ஶுத்தமான ஞானமும், கல்வியும், செல்வமும் பெறுவோம் என்பதில் ஐயமொன்றுமில்லை.

7 தா$^3$க்ஷிண்யரம்யா கி$^3$ரிஶஸ்ய மூர்த்தி:
தே$^3$வீ ஸரோஜாஸந த$^4$ர்மபத்நீ |
வ்யாஸாத$^3$யோऽபி வ்யபதே$^3$ஶ்ய வாச:
ஸ்பு$^2$ரந்தி ஸர்வே தவ ஶக்திலேஶை: ||

பரமஶிவன் ஜீவர்கள் உய்வடைய அநந்தமான உபதேஶங்களைச் செய்தருள்கிறார். அபரிமிதமான பலன்களை அள்ளித்தரக் கூடிய அவர் உபதேஶங்கள் பூமி உள்ள வரை, ஸூர்ய சந்திரர்கள் உள்ளவரை ஜீவர்களுக்கு எவ்விதம் வாழ்வாங்கு வாழ வழி செய்வன என்பதெல்லாம் அவரவர் அநுபவித்து உணரத்தக்கவை. முன்னொருமுறை ஆலமரத்தினடியில் அமர்ந்து தக்ஷிண திசை நோக்கி தக்ஷிணா மூர்த்தியாய் அகஸ்தியர், புலஸ்தியர், தக்ஷர், மார்க்கண்டேயர் போன்ற மஹரிஷிகளுக்குத் தத்வார்த்தங்களை உபதேஶித்தருளியும், என்றென்றும் அண்டியவர்க்கு உபதேஶம் செய்யும் குருவாகவும் விளங்கி வருகிறார். ப்ரம்மனின் பத்னியான ஸரஸ்வதி தேவி, ஸ்ரீ பரிமுகனின் மடியில் அமர்ந்துள்ள வாக்தேவியின் பதினாறில் ஒரு பாகமாக விளங்கினபோதிலும், கல்விக்கு தேவதையாக மதிக்கப்படுகிறாள். வ்யாஸர், பராஶரர், வால்மீகி போன்ற மஹரிஷிகள் இதிஹாஸ புராணங்களையும் பல அரியபெரிய க்ரந்தங்களையும் (நூல்) படைத்து உள்ளனர். இம்மஹோன்னதர்கள் இப்படிப்பட்ட மேதா ஶக்தியைப்பெற்று உயர்ந்து விளங்குவது, ஸ்ரீ ஹயவதனப் பெருமானின் லேஶமாத்ர ஶக்தி திவலையை அநுக்ரஹமாகப் பெற்றதால் தானே? முழுமுதற் பொருளாக, கல்விக்கே ஆதாரமாகத் திகழ்வது ஸ்ரீ பரிமுகன் தானேயன்றோ!

8 மந்தோ3ऽப4விஷ்யந்நியதம் விரிஞ்சோ
வாசாம்நிதே4 வஞ்சித பா4க3தே4ய: |
தை3த்யாபநீதாந் த3யயைவ பூ4யோऽபி
அத்4யாபயிஷ்யோ நிக3மாந் நசேத் த்வம் ||

எம்பெருமான் ப்ரம்மனின் அந்தர்யாமியாக இருந்து படைப்புத்தொழிலைப் புரிகிறார். அந்த ப்ரம்மன் தம் தொழிலைப் புரிவதற்கு ஆதாரம் வேதங்களே. புராணங்கள், இதிஹாஸங்கள் மூலமாக நாம் உணர்வது அஶுரர்களாயினும் அவர்களும் தவமியற்றி அதற்குரிய பயன்களைப் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதையே ! மது, கைடபர் என்ற இரு அஶுரர்கள் தவவலிமையால் ப்ரம்மனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து செல்ல, ஸ்ரீ ஹயக்ரீவன் அவர்களிடமிருந்து வேதங்களை மீட்டு, புனிதமான தம் திருவாக்கால் ப்ரம்மனுக்கு உபதேஶித்தருளியதால்தானே ப்ரம்மனால் படைப்புத் தொழிலைத் தொடர்ந்து செய்ய இயன்றது! "வாசாம்நிதே! ஸகல ஞானத்திற்கும் கலைகளுக்கும் இருப்பிடமான பரிமுகப்பெருமானே! உமது இக்கருணையைப் பெறாதிருந்தால் ப்ரம்மதேவர் தமது பாக்யத்தை இழந்து மூடத்தன்மை மிக்கவராகவல்லவோ இருந்திருப்பார்!" என ஸ்வாமி வியந்து பேசுகிறார்.

9 விதர்க்க டோ3லாம் வ்யவதூ4ய ஸத்வே
ப்3ருஹஸ்பதிம் வர்த்தயஸே யதஸ்த்வம் |
தேநைவ தே3வ த்ரித3ஶேஶ்வராணாம்
அஸ்ப்ருஷ்ட டோ3லா யிதமாதி4ராஜ்யம் ||

இந்த ஶ்லோகம் சேதனன் மிகக் கவனமாக படித்து மனதார உணர வேண்டிய ஒன்று. இரண்டு முக்கியமான உபதேஶங்கள் இதில் மறைந்து உள்ளன. முதலாவது, ஆசார்ய கடாக்ஷம் மிகமுக்கியமானதும், வாழ்வாதாரமும் ஆகும். ஆசார்ய கடாக்ஷம் பெற்ற ஒருவன் ஸர்வஸுலபமாக தேஹயாத்திரையை முடித்து மோக்ஷமும் பெற்றுவிடுகிறான். இரண்டாவது, மஹாவிஶ்வாஸம், அதாவது அசைக்க முடியாத திட நம்பிக்கை. ஸந்தேஹம் வருமானால் அடிப்படை நம்பிக்கையையே இழக்கப்பெற்று லௌகீக, பார லௌகீக கார்யங்களில் நிறைவேறாததன்மை

அடைபவராவோம். தேவகுருவான ப்ருஹஸ்பதியின் சீற்றத்திற்கு ஆளான தேவேந்திரன் தமது பதவிச்செல்வத்தை இழந்து அஸுரர்களின் படையெடுப்பிற்கு ஆளான நிலையை ஸ்ரீமத் பாகவதத்தின் வாயிலாக நாமறிகிறோம். அதாவது ஆசார்ய கடாக்ஷம், மஹாவிஶ்வாஸம் இந்த இரு நிலைகளிலும் தாமே உன்னதமாய் விளங்கி, ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன் அமரர்களையும் நம் போன்ற சேதனர்களையும் எவ்விதம் காத்தருள்கிறார் என்று இந்த ஶ்லோகம் எடுத்துரைக்கின்றது. ஸ்ரீ பரிமுகன் கடாக்ஷத்தால் அன்றோ தேவலோக ஆட்சி ஊசலாடும் நிலையினின்றும் தப்பி, அந்தந்த தேவதா ஸ்வரூபம் தம்தம் கடமைகளைச் சீராக செயலாற்றும் நிலை ஏற்பட்டு, எம்பெருமானின் லீலாவிபூதி தடையற நடைபெறுவதாக ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீ பரிமுகனின் பெருமையைப் பரக்க பேசுகின்றார். ஸ்ரீ பரிமுகனே அன்றோ ஸந்தேஹத்தால் ஊசலாடும் ஜீவர்களையும் நிலைபெறச் செய்கிறார்.

10 அக்3நௌ ஸமித்3தா4ர்ச்சிஷி ஸப்ததந்தோ:
ஆதஸ்த்தி2வாந் மந்த்ரமயம் ஶரீரம் |
அக2ண்ட3 ஸாரைர்ஹவிஷாம் ப்ரதா3நை:
ஆப்யாயநம் வ்யோமஸதா3ம் வித4த்ஸே ||

ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ ஸஹஸ்ரநாமத்தில் "ஓம் தேவயஜநாய நம:" என ஒரு திருநாமம் வருகின்றது. யாகம் எனப்படும் கர்மாவே எம்பெருமானின் ஸ்வரூபம், ஸங்கல்பம் என பொருள்படும், யஜ்ஞாத்மகனாக இருந்து யாகத்தின் பலனை தந்தருள்பவரும் ஸ்ரீ ஹயவதனன்தான். யாகத்தில் அளிக்கப்படும் ஹவிர்பாகத்தை ஏற்று அந்தந்த யாக போக்தாவாக விளங்கும் தேவதா ஸ்வரூபம் யாராயினும் அவரவர் அந்தர்யாமியாய் பலனளிப்பவர் ஸ்ரீ ஹயவதனப்பெருமானே!. கொழுந்து விட்டு எரியும் வேள்வி அக்னியில் ஸகலவித மந்த்ர ஸ்வரூபமாய் தாமே எழுந்தருளி, அளிக்கப்படும் ஹவிர்பாகத்தைப் பூரணமாக ஏற்று ஹவிஸ்ஸுகளின் கொடையால் வானுறையும் தேவர்களுக்கு த்ருப்தியை விளைவிப்பது கருணை மிகுந்த ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே! அவர்கள் த்ருப்தி அடைவதாலேயே யக்ஞகர்த்தா தம் வாஞ்சா பலன்களைப் பெறுகிறான்.

11 யந்மூலமீத்$^{3}$ருக் ப்ரதிபா$^{4}$தி தத்வம்
யா மூலமாம்நாய மஹாத்$^{3}$ருமாணாம் |
தத்வேந ஜாநந்தி விஶுத்$^{3}$த$^{4}$ஸத்வா:
த்வாமக்ஷராமக்ஷரமாத்ருகாம் தே ||

இந்த ப்ரபஞ்சம், தேவர்கள் தொடங்கி தாவரங்கள் ஈறான எல்லா ஜீவர்களும், ஐந்து மூல தத்துவங்களை - ஆகாயம், காற்று, அக்னி, நீர், பூமி இவைகளை - தன்னுள் கொண்டதாய் உள்ளது. இந்த ஸ்ருஷ்டிக்கு ஆதாரமாக விளங்கும் படைத்தலை இயக்குவதாக உள்ளது வேதம். வேதங்களின் ஸூத்ரங்கள் எதைப் பாராயணம் செய்தாலும் ஆரம்பத்திலும், முடிவிலும் ஓதப்படும் மூலாதாரமான "ஓம்" என்கிற ப்ரணவ மந்திரம், அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்று அக்ஷரங்களின் தொகுதியாய் விளங்குகிறது. ஈஶ்வரன், பிராட்டி, ஜீவன் என மூவரையும் குறித்து அவர்களின் பரஸ்பர ஸம்பந்தத்தை விளக்குவது இந்த ப்ரணவ மந்திரம். ஸ்ரீ பரிமுகனின் திவ்யகடாக்ஷம் பெற்ற குணமுள்ள பெரியோர் உணர்வது, "இத்தகைய ப்ரணவ வடிவமாக நிற்கும் நீவிர் ப்ரணவத்தின் ஸ்வரூபமாகவும், அதன் அக்ஷரங்களின் தொகுதியாகவும் விளங்குகின்றீர்." என்பதையே. இவ்வரிய உண்மையை உணர்ந்தவர்கள் ஸ்ரீ பரிமுகனின் ப்ரஸாதமான ஞானம் பெற்றவராவர்.

12 அவ்யாக்ருதாத்$^{3}$ வ்யாக்ருதவாநஸி த்வம்
நாமாநி ரூபாணி ச யாநி பூர்வம் |
ஶம்ஸந்தி தேஷாம் சரமாம் ப்ரதிஷ்ட்டா$^{2}$ம்
வாகீ$^{3}$ஶ்வர! த்வாம் த்வது$^{3}$பஜ்ஞவாச: ||

மேற்கூறியுள்ளபடி ப்ரபஞ்சத்தில் உள்ள யாவரையும் உருவாக்கி லீலா விபூதியை நிர்வஹிப்பவர் ஸ்ரீ ஹயக்ரீவன் என்பதாகிறது. வேதங்களை முதன்முதலாகக் கொண்டுவந்து ப்ரம்மனுக்கு உபதேஶித்து, ஸ்ருஷ்டி, லீலாவிபூதி இவற்றை நிர்வாஹம் செய்கிறார். மேலும் ஸ்ருஷ்டியிலுள்ள எல்லா ஜீவனுக்குள்ளும் அந்தர்யாமியாக உறைந்திருந்து செயல்புரிகிறார். ஆரம்பமான ப்ரணவ ஸ்வரூபமாக

மட்டுமல்லாது வேதத்தின் உட்பொருளாக, எல்லை நிலமாகவும் விளங்குவது ஸ்ரீ பரிமுகன்தான். எம்பெருமான் பெருமைகளைச் சொல்லித்தான் வேதத்தின் பூர்த்தி ஏற்படுகின்றது. இப்படி எல்லா நிலைகளிலும் ஸர்வாதாராமாக விளங்கும் பரம்பொருளாகிய ஸ்ரீ பரிமுகன் ஸ்ரீ வைகுந்தத்தின் தலைவனாக விளங்கி, எல்லா ஜீவர்களையும் வழிநடத்தி மோக்ஷம் வரையிலான பலன்களை அருளி, நிர்வஹித்து வருகிறார்.

13 முக்தே[4]ந்து நிஷ்யந்த[3] விலோப[4]நீயாம்
மூர்த்திம் தவாநந்த[3] ஸுதா[4]ப்ரஸூதிம் |
விபஶ்சிதஶ்சேதஸி பா[4]வயந்தே
வேலாமுதா[3]ராமிவ துக்த[4]ஸிந்தோ[4]: ||

"வெள்ளைப் பரிமுகன்" என ஸ்ரீ ஸ்வாமி தேஶிகன் கொண்டாடுவதுபோல ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன் திருமேனி நிர்மலமான ஶ்வேத வர்ணமுடையது. அது இளம்பிறைச் சந்திரனுடைய வெண்மை ஒளியே திரவமாகி உருவானதுபோலக் குளிர்ந்து விளங்குகின்றது. அது சேதனர்களின் ஹ்ருதய, ஆத்ம, தாபத்தைப் போக்குவதாய் உள்ளது. திருப்பாற்கடலினின்றும் தோன்றிய ஒரு பெரிய பிழம்போ எனும்படியான அவர் திருமேனி அவரை த்யானிக்கும் ஞானிகளின் உள்ளத்தில் அமுதத்தைப் பெருக்கி, ஹிதமான ஒளியை பரப்பி, அவர்கள் மிகமிக மகிழ்வுறுமாறுச் செய்கிறது. எம்பெருமானை அமலன், விமலன், நிர்மலன் என பலபடக் குறிப்பிட்டு அவர் அகில ஹேயகுண ப்ரத்யநீகன் என்பதை அறிவுறுத்துவர். வெள்ளைப் பரிமுகர் சின்முத்ரா லங்க்ருதனாக ஆசார்ய வடிவில் இருந்து அஜ்ஞான இருளைப் போக்க, நம் ஆத்மாவிற்கு ஸ்வரூப ஞானம் ஏற்பட்டு அவர்தம் கருணையால் "மாஶுச" என்கிற விதமாய் துக்கத்திலிருந்து விடுபட்டு, நம்பிக்கை உண்டாகி, இவ்வாத்மா தப்பாமல் உய்வடையப் போகிறது எனும்போது, அடியோங்கள் மகிழ்ச்சியடைவதில் தடையென்ன ஏற்படப் போகிறது ? ஸ்ரீ பரிமுகனின் சந்திர ஒளியை ஒத்த ஹிதமான ப்ரகாஶம் இவ்விதமான உபகாரத்தைச் சேதனனுக்குச் செய்கின்றது.

14 மநோக$^{3}$தம் பஸ்யதி ய: ஸதா$^{3}$ த்வாம்
மநீஷிணாம் மாநஸ ராஜஹம்ஸம் |
ஸ்வயம் புரோபா$^{4}$வ விவாத$^{3}$ பா$^{4}$ஜ:
கிங்குர்வதே தஸ்ய கி$^{3}$ரோ யதா$^{2}$ர்ஹம் ||

"ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே ! ஞானிகளாகிய உத்தமர்களின் மனதாகிய பொய்கையில் நிர்மலமான ராஜஹம்ஸத்தைப் போல தாங்கள் விளங்குகின்றீர்கள்." என்று ஸ்வாமி கொண்டாடுகிறார். ஹம்ஸ பக்ஷி எப்போதுமே ஸாரதமமான பொருளை மட்டுமே க்ரஹிக்கும். ஸ்ரீ ஹயக்ரீவனை "ஹம்ஸ" எனக் குறிப்பிடுகின்றனர். தூய மனமுடைய பெரியோர்களின் மனமாகிய பொய்கையில் விளங்கி உண்மையான ஞானத்தைப் பெறுமாறு செய்பவர் ஸ்ரீ பரிமுகப் பெருமான். யார் இப்படிப்பட்ட ராஜ ஹம்ஸத்தைத் தமது நிர்மலமான மனதால் ஸதா த்யானிக்கின்றார்களோ அவர்களுக்கு வாக்குகள் போட்டி போட்டுக்கொண்டு வலிய வந்து தொண்டு செய்கின்றன. கைங்கர்யம் புரிபவரை கிங்கரன் என்பர். மனத்தால் ஸ்ரீ பரிமுகனை த்யானிப்பவர்க்கு வாக்ஶக்தி கிங்கரன் போலத் தொண்டு புரியும் என்கிறார். ஸ்ரீ பரிமுகனை த்யானிப்பவர் வல்லமை எத்தகையதாக இருக்கும் !

15 அபி க்ஷணார்த்த$^{4}$ம் கலயந்தி யே த்வாம்
ஆப்லாவயந்தம் விஶதை$^{3}$ர்மயூகை$^{2}$: |
வாசாம் ப்ரவாஹை ரநிவாரிதைஸ்தே
மந்தா$^{3}$கிநீம் மந்த$^{3}$யிதும் க்ஷமந்தே ||

அடுத்ததான இந்த ஶ்லோகத்தில் பலபடிகள் மேலே சென்று ஸ்ரீ பரிமுகனை த்யானிக்கும் பெரியோரின் பெருமையைக் கேட்டாலே விக்கித்துப் போகுமாறு பேசுகின்றார் ஸ்வாமி. ஸ்ரீ ஹயக்ரீவன் தமது வெண்மையான ஒளியை அடியார்கள் மீது வீசுகின்றார். அவர்கள் இதனால் மிகக் குளிர்ந்து போகின்றனர். ஒரு கணப்பொழுதாவது ஸ்ரீ ஹயக்ரீவனை, அதாவது இப்படிப்பட்ட பலனை அடியார்க்கு அருள்பவனை, த்யானம் செய்தால் அவர்களுக்கு தடையற்ற வாக்கு வெள்ளம் ப்ரவஹிக்கின்றது. அவர்கள் கங்கையை விஞ்சிய வேகத்தில் ப்ரவஹிக்கும் சொல்வளம் மிக்கவராகி, தூய வாக்ப்ரபாவம் உடையவராகி விடுகின்றனர்.

16 ஸ்வாமிந்! ப4வத்3 த்4யான ஸுதாபி4ஷேகாத்
வஹந்தி த4ந்யா: பு2லகாநுப3ந்த4ம் |
அலக்ஷிதே க்வாபி நிரூட4மூலம்
அங்கே3ஷ்விவாநந்த3து2ம் அங்குரந்தம் ||

இந்த ஶ்லோகத்தில் ஸ்வாமி எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவனை, அவனுக்காகவே, அவன் மீது தூய அன்பும் ஈடுபாடும், கொண்டு, அவன் பெருமையை நினைந்து ஆஶ்சரியப்பட்டு த்யானம் செய்தால், இவ்வுலகில் இருக்கும் போதே ஸ்ரீ பரிமுகன் அண்மையை உணர முடிகிறதே என வியக்கிறார். புண்ணியஶாலிகள் உள்ளமுவந்து ஸ்ரீ பரிமுகனை த்யானிக்கிறார்கள். அதனால் அப்பேர்ப்பட்டவர்கள் ஹ்ருதயத்தில் வேரூன்றி இருக்கும் அன்பு நிறைவால் புளகாங்கிதம் அடைகின்றனர். அதன் வெளிப்பாடாக அவர்களின் அவயவங்களிலெல்லாம் மயிர்க்கூச்சு ஏற்படுகின்றது. துக்கக் கலப்பற்ற மகிழ்ச்சி மயிர்க்கூச்சை ஏற்படுத்தும். எம்பெருமானிடம் ஈடுபட்டு லயித்தால் ஏற்படும் மகிழ்ச்சி தெய்வீகமான இன்பத்தைத் தரும். அது துக்கக் கலப்பற்றது என்பதை ஸ்வாமி இங்கு ஸூசிப்பிக்கின்றார்.

17 ஸ்வாமிந்! ப்ரதீசா ஹ்ருத3யேந த4ந்யா:
த்வத்3 த்4யாந சந்த்ரோத3ய வர்த்த4மாநம் |
அமாந்தமாநந்த3 பயோதி4மந்த:
பயோபி4ரக்ஷ்ணாம் பரிவாஹயந்தி ||

பெரியோர்களை, மஹநீயர்களை தரிஶிக்கும்போது நமது ஆன்மா ஶ்ரத்தை மேலீட்டால் உயரக் கிளம்புகிறது. அதனாலேயே உடனே அவர்களை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஆத்மாவை நிலைபெறச் செய்கிறோம் என ஶாஸ்திரம் அறிந்த மஹான்கள் கூறுவர். அதுபோல உலக விஷயங்களில் அதிகமாகப் ·பற்று வைக்காத பாக்கியஶாலிகள் உள்நோக்கிய மனதால் ஸ்ரீ ஹயக்ரீவனை த்யானிக்கின்றனர். சந்திரோதயம் கண்ட கடலலைகள் மிகவாய்ப் பொங்கி ஆர்ப்பரித்து எழுவது போல மகிழ்ச்சியால் அவர்கள் உள்ளம் பொங்குகின்றது. ஆற்றில் வெள்ளம் பெருகினால் கால்வாயில் நீர்ப்பெருக்கு ஏற்படுவது போல

அப்படிப்பட்ட பாக்கியசாலிகளின் மகிழ்ச்சிப் பெருவெள்ளம் ஆனந்தக் கண்ணீராக வெளிப்படுகின்றது. இது உத்தம பக்தர்களின், பெருமானுக்காகவேப் பெருமானை நினைப்பவர்களின் உயர்ந்த அநுபவமாகும்.

18 ஸ்வைராநுபா$^{4}$வாஸ்த்வத$^{3}$தீ$^{4}$ந பா$^{4}$வா:
ஸம்ருத்$^{3}$த$^{4}$வீர்யாஸ் த்வத$^{3}$நுக்$^{3}$ரஹேண |
விபஶ்சிதோ நாத$^{2}$! தரந்தி மாயாம்
வைஹாரிகீம் மோஹநபிஞ்சி$^{2}$காம் தே ||

ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே ! உலகில் வித்தைகாட்டும் கழைக்கூத்தாடிகள் மயில் தோகையை அசைத்து பார்ப்போரை மயங்கச் செய்வர். அதுபோல கர்மவஶ்யராகிய ஜீவர்களும் ப்ரக்ருதியில் உள்ள கவர்ச்சிக்கு ஆட்பட்டு மயங்குகின்றனர். ஸ்ரீ பரிமுகனிடம் ஈடுபட்ட ஞானிகள் இவ்விதமான மாயவலைகளில் சிக்குவதில்லை. எம்பெருமானிடமே ஈடுபட்ட அவர்களின் மனது மேன்மேலும் உறுதி பெறுகிறது. அத்தகைய பெரியோர்பால் பரிமுகனின் பரிவு, கருணை சுரக்கின்றது. அவர்கள் இவ்விதமான மாயைகளை ஸுலபமாகக் கடந்து கரையேறுகின்றனர். இது ஸ்ரீ ஹயக்ரீவனின் பெருமையாலன்றோ ஸாத்யமாகின்றது ? ஞான, ஆநந்தமய ஸ்வரூபமான ஸ்ரீ ஹயக்ரீவனை த்யானிக்க அஜ்ஞான இருள் நீங்குவது இயல்புதானே !

19 ப்ராங்நிர்மிதாநாம் தபஸாம் விபாகா:
ப்ரத்யக்$^{3}$ர நிஶ்ரேயஸ ஸம்பதோ$^{3}$ மே |
ஸமேதி$^{4}$ஷீரம்ஸ்தவ பாத$^{3}$பத்$^{3}$மே
ஸங்கல்ப சிந்தாமணய: ப்ரணாமா: ||

எம்பெருமானுடைய ஸ்ரீகௌஸ்துபமென்னும் மணியினின்றும் ஆத்மாக்கள் பிறவி எடுத்து, ப்ரக்ருதியில் வந்து தோன்றி, அதன் ஈர்ப்புகளால் பாப, புண்ணியதளைகளில் (விலங்குகளில்) சிக்குகின்றன. எத்தனையோ பிறவிகளில் செய்த புண்ணிய பலனால் மட்டுமே ஒரு ஜீவனுக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவப் பெருமானின் திருவடிகளைத் தொழும் பாக்கியம் கிட்டுகின்றது. இதையே யன்றோ ஸ்ரீ கீதாசார்யனான கண்ணனும் பகவத் கீதையில்

" பஹூநாம் ஜன்ம நாமந்தே

ஞாநவான் மாம் ப்ரபத்யதே " என்கிறார். பெருந்தவப் பயனால் மட்டுமே இப்பலன் கிட்டும். இப்பலன் ஜீவனுக்கு மோக்ஷமென்னும் இழிதல் இல்லாத பேரின்பத்தை அருள்கின்றது. சிந்தாமணி என்னும் ரத்தினம் வேண்டிய பலனை அளிப்பது போல எம்பெருமான் திருவடிகளைப் பெற்ற ஜீவன் மற்றைய நற்பலன்களையும் பெறுகிறான். ஆதலால், "எம்பெருமானே ! என்றென்றும் மாறாத ஈடுபாடு கொண்டு மேன்மேலும் நின் திருவடிகளையே பற்றி நிற்குமாறு நீயே அடியேனுக்கு அருள்புரிய வேண்டும். நின் ஸங்கல்பம் அடியோங்கள் பக்கலில் ஸாதகமாகவே இருந்து என்றென்றும் மறவாமல் நின் திருவடிகளைத் தொடர்ந்து தொழுது கொண்டிருக்கும் பாக்கியத்தை அருள வேண்டும்," என நமக்காக ஸ்வாமி இறைஞ்சுகின்றார்.

20 விலுப்த மூர்த்த⁴ந்ய லிபிக்ரமாணாம்
ஸுரேந்த்³ர சூடா³பத³ லாலிதாநாம் |
த்வதங்க்⁴ரி ராஜீவ ரஜ: கணாநாம்
பூ⁴யாந் ப்ரஸாதோ³ மயி நாத²! பூ⁴யாத் ||

"ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே ! அவரவர் செய்த பாப, புண்ணியத்திற்கேற்ப அமையும் ஜன்மாவில் ஒருவனுடைய வாழ்க்கையின் போக்கை "ப்ரம்மலிபி" (தலையெழுத்து) என பிரமன் பிறக்கும்போதே எழுதிவிடுகிறான். ஆனாலும் நின் திருவடித்தாமரைகளைத் தொழுதால் உன் திருவடித்துகள் அந்த எழுத்துக்களை அழித்துவிடுகின்றன. உன் கருணையால் நன்மைகளே நடக்குமாறு அமைந்து பிறவிக்கடலைக் கடந்து மோக்ஷாநந்தத்தையும் பெற்று விடுகிறோம் என்றால் இதைவிட வேறு என்ன உன்னதத்தைப் பெற வேண்டும்? ப்ரம்மாதி தேவர்களும் உன் திருவடித்துகள்களைத் தமது ஶிரஸ்ஸில் தரித்துப் போற்றுகின்றனர். அடியேன் ஶிரஸ்ஸிலும் தேவரீர் திருவடி ஸம்பந்தத்தால் துகள்கள் தரிக்கப்பெற்று நின் போக்கியமான திருவருள் அடியேன் பாலும் சுரக்குமாறு அருள் பாலிக்க வேண்டும்" என ஸ்வாமி இறைஞ்சுகிறார்.

21 பரிஸ்ப்பு$^2$ரந் நூபுர சித்ரபா$^4$நு
ப்ரகாஶ நிர்த்தூ$^4$த தமோநுஷங்கா$^3$ம் |
பத$^3$த்$^3$வயீம் தே பரிசிந்மஹேந்த:
ப்ரபோ$^3$த$^4$ராஜீவ விபா$^4$த ஸந்த்$^4$யாம் ||

ஸூர்ய மண்டலத்தின் நடுவிலிருந்து ஸவித்ரு மண்டல மத்யவர்த்தியாய் ஸ்ரீ ஹயக்ரீவன் யாக்ஞவல்க்ய மஹரிஷிக்கு ஶுக்ல யஜுர்வேதத்தை உபதேஶித்தார் என்பதை அறிகிறோம். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகன் இந்த ஶ்லோகத்தில் எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவன் திருவடிகளில் அணிந்திருக்கும் சதங்கைகளின் மஹிமை பற்றிக் கூறுகிறார். ஸூர்யனையொத்த ப்ரகாஶத்தைப் பரப்பி எம்பெருமானின் சதங்கைகள் மக்களின் அஞ்ஞான இருளைப் போக்கிவிடுகின்றன. இதன் பயனாய் சேதனர்களுக்கு தெளிந்த ஞானம் ஏற்படுகின்றது. இவ்விதமான அபார மஹிமை பொருந்திய ஸ்ரீ ஹயக்ரீவனின் திருவடிகளை எப்போதும் உள்ளத்தில் நிறுத்தி, த்யானித்து, நம் ஸபலம் ஸித்தியாகி ஸாபல்யர்களாகிறோம்.

22 த்வத்கிங்கரா லங்கரணோசிதாநாம்
த்வயைவ கல்பாந்தர பாலிதாநாம் |
மஞ்ஜுப்ரணாத$^3$ம் மணிநூபுரம் தே
மஞ்ஜூஷிகாம் வேத$^3$கி$^3$ராம் ப்ரதீம: ||

ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே ! வேதங்களை மீட்டு பிரமனுக்கு உபதேஶித்ததோடல்லாமல் அவைகளை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து கல்பந்தோறும் தேவர்களும், மானிடர்களும் பெற்று பயன்பெறுமாறு செய்து வருகின்றீர். அணிகலன்கள் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவது போல வேதங்கள் உமது திருவுள்ள ஸங்கல்பத்தால் பாதுகாக்கப்படுவதுடன், மணிநூபுரம் என்ற உமது ஶதங்கை ஒலி வேதார்த்தங்கள் போதிப்பதாயுள்ளது. பாதுகா ஸஹஸ்ரத்தில் எம்பெருமானுடைய பாதுகைகள் தமது மணிகளின் ஒலியால் சேதனனுக்கு “மாபைஷீரிதி“ என அபயம் அருள்வதாகவும், சேதனனின் அபயக்குரல் ஸ்ரீ ரங்கநாதனின் திருச்செவிகளில் தவறாது விழும்விதமாக “மந்தப்ரசாரம்“ செய்து ஶப்தமிடாமல் இயங்குவதாகவும் குறிப்பிட்டு,

ஸ்வாமி, சேதனன்பால் பெருமான், ஆசார்யனின் பரிவு எவ்விதமான கற்பனைக்கும் அப்பாற்பட்டது என நாத பத்ததியில் விளக்குகிறார். நாத பத்ததி, வேதஶப்தங்களைக் கொண்டு வேதஸாரமாக விளங்குவது. பரிமுகனின் ஶதங்கைகளும் வேதார்த்தங்களையே ஒலிக்கின்றன. இவ்வாறாயின் சேதனன் எதைக் குறித்தும் கவலையடைய வேண்டியதேயில்லை. "மாசுச", துக்கத்தைவிடு என்று க்ருபை ஸாதித்த கீதாசார்யனான கண்ணன் வாக்கு இங்கு பொருந்தும்.

23 ஸஞ்சிந்தயாமி ப்ரதிபா$^{4}$த$^{3}$ஶாஸ்தா$^{2}$ந்
ஸந்து$^{4}$க்ஷயந்தம் ஸமய ப்ரதீ$^{3}$பாந் |
விஜ்ஞாந கல்ப த்$^{3}$ரும பல்லவாப$^{4}$ம்
வ்யாக்$^{2}$யாந முத்$^{3}$ரா மது$^{4}$ரம் கரம் தே ||

ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரத்திற்கே உரிய தனித்தன்மை இதுவே, அவதாரம் என்றால் இறங்கிவருதல், துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தம் எண்ணிலடங்கா மஹத்துவங்களை வெளிப்படுத்துவது என்பதாகும். ஒவ்வோர் அவதாரத்திலும் தமது அவதார லக்ஷியத்தை பூர்த்தி செய்து ரக்ஷணவியாபாரம் செய்தார். ஸ்ரீ பரிமுகன் எடுத்த அவதாரமோ ப்ரம்மனுக்கு வேதங்களை உபதேஶித்ததுடன் முடிந்து விடவில்லை. ஸ்ருஷ்டிக்கு ஆதாரமான வேதோபதேஶம் செய்ததுடன், இவ்வுலகங்கள் உள்ளவரை, ஜீவர்கள் உள்ளவரை, வேதார்த்தங்களையும், நல்லுபதேஶங்களையும் செய்து ஞானவ்ருத்தி வியாபாரத்தைச் செய்து கொண்டே இருந்துவரும் ஸாக்ஷாத் பரவாஸுதேவனே ஸ்ரீ ஹயக்ரீவன் என்பதால் கற்பக விருக்ஷத்தின் அழகிய தளிர் போன்ற தனது வலதுகரத்தில் ஞானமுத்திரை ஏற்று நம்மை உய்வடையச் செய்து வருகிறார். இம்முத்திரை, வேதார்த்தங்கள் எனும் தீபங்களை ப்ரகாஶிப்பிக்கும் மேதை என்கிற திரிபோன்று ஒளிர்விட வைக்கின்றது. ஸ்ரீ பரிமுகனை த்யானிப்பவர்க்கு இம்முத்திரை கற்பக மரம் போன்று விரும்புவதைத் தரவல்லது. இத்தகைய இணையற்ற ஸ்ரீ பரிமுகனின் ஞானமுத்திரைக் காட்டியருளும் திருக்கரத்தை எப்போதும் தியானித்து உண்மையான ஞானமும், ஒப்பற்ற நற்பலன்களும் பெறுவோம்.

24 சித்தே கரோமி ஸ்ப்பு$^{2}$ரிதாக்ஷமாலம்
ஸவ்யேதரம் நாத$^{2}$! கரம் த்வதீ$^{3}$யம் |
ஜ்ஞாநாம்ருதோத$^{3}$ஞ்சந லம்படாநாம்
லீலா க$^{4}$டீயந்த்ர மிவாஶ்ரிதாநாம் ||

இந்த ஶ்லோகத்தின் முதல் வரியில் எம்பெருமானை "நாத" – என விளிக்கிறார். ஞான முத்ராங்கிதமாய் இருக்கும் தமது வலது திருக்கையில் அக்ஷமாலை ஏந்தி உள்ளார். அந்த அக்ஷமாலை கிணற்றிலிருந்து தண்ணீரை முகந்து முகந்து வெளியில் சேர்க்கும் சால்போல ஞானமாகிய அமுதத்தை சேதனர்களுக்கு முகந்து முகந்து அளப்பரியதாய் அளிக்கின்றது. அவ்வரிய கருணையை அடியார்களுக்கு அளித்தருளும் அக்ஷமாலை ஏந்திய வலது திருக்கரத்தை எப்போதும் நமது ஸித்தத்தில் உவந்து த்யானிப்போமாக. அப்படிப்பட்ட நிகரற்ற சிந்தனையை பரிமுகனே கருணை கொண்டு அடியார்கட்கு தந்தருள வேண்டும்.

25 ப்ரபோ$^{3}$த$^{4}$ ஸிந்தோ$^{4}$ரருணை: ப்ரகாஶை:
ப்ரவால ஸங்கா$^{4}$த மிவோத்$^{3}$வஹந்தம் |
விபா$^{4}$வயே தே$^{3}$வ! ஸபுஸ்தகம்தே
வாமம் கரம் த$^{3}$க்ஷிணமாஶ்ரிதாநாம் ||

ஸ்ரீ ஹயக்ரீவன் தனது இடது திருக்கரத்தில் அஜ்ஞான இருளைப் போக்கி, ஸத்தான ஞானத்தை அருளும் வேத வேதார்த்தங்கள் நிரம்பிய புத்தகங்களை ஏந்தியுள்ளார். ஞானத்தை நல்கும் புத்தகங்களை ஏந்திய எம்பெருமானின் இடது கரத்தை த்யானித்து அபரிமிதமான ஞானத்தைப் பெற ஸ்ரீ பரிமுகனே அருள்பவனாக உள்ளார். எம்பெருமானுடைய திருக்கரம் செம்மை நிறம் பொருந்தியதாய் பவழ நிறத்தை ஒத்தும், ஞானக்கடலினின்று பவழங்களின் தொகுதியை எடுத்து வழங்குவதாயும் உள்ளது. "அருணை ப்ரகாஶை" எனக்குறிப்பிட்டு உதய ஸூர்யனின் ஒளியுடன் ஒப்பிடுகிறார். இரவின் இருளைப் போக்கும் உதய ஸூர்யனின் ஒளிபோல மக்களின் அஜ்ஞான இருளைப் போக்குவதாக ஸ்வாமியின் திருக்கரத்தின் செம்மை ஒளி விளங்குகிறது. "ஆஶ்ரிதாநாம் தக்ஷிணம்" – என ஸ்வாமி தக்ஷிணம் என்கிற பதத்தை

வல்லமை என்ற பொருளில் பயன்படுத்துகிறார். இடக்கரத்தின் வல்லமை எனக் கூறும்போது, வாமம் கரம் (இடது கரம், தக்ஷிணம்) வலது என்பது போல சொல்நயம் கொண்டு ஸ்வாமி திருஹஸ்த விஶேஷத்தைக் கொண்டாடுகிறார். அப்பேர்ப்பட்ட வாம (இடது) திருக்கரத்தை தியானித்து அபரிமிதமான ஞானத்தைப் பெறுவோமாக !

26 தமாம்ஸி பி[4]த்வா விஶதை[3]ர்மயூகை[2]:
ஸம்ப்ரீணயந்தம் விது[3]ஷஶ்சகோராந் |
நிஶாமயே த்வாம் நவபுண்ட[3]ரீகே
ஶரத்[3]க[4]நே சந்த்[3]ரமிவ ஸ்பு[2]ரந்தம் ||

சந்திர மண்டலவாஸியாகிய ஸ்ரீ ஹயக்ரீவன் ஶுத்த ஸ்படிகம் போன்ற தூய்மையான வெண்மை நிறம் கொண்டு ஒளி வீசுகின்றார். இதனால் உலகில் அஜ்ஞான இருள்விலகி பண்டிதர்கள் மிகவும் மகிழ் வெய்துகின்றனர். புதிதாய் மலர்ந்த வெள்ளைத் தாமரையில் ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறார். இந்த வெண்மையான காந்தி எம்பெருமானின் குணநலன்களில் ஈடுபட்டு புளகாங்கிதமடைகிறது. சேதனர்களின் மகிழ்ச்சிக்கு உவமை கூற வேண்டுமாயின் ஶரத்கால அதாவது ஐப்பசி மாதத்தில் பூர்ணமாக ஒளிர்விடும் சந்திர காந்தியைக் கண்டு நிலவையே உணவாகக் கொள்ளும் ஶகோர பக்ஷிகளைக் கூறலாம். இத்தகைய ஶுத்த ஸத்வமான, சந்திரகாந்தி போன்ற வெண்மை ஒளிர்விடும் ஸ்ரீ ஹயக்ரீவனை த்யானித்து, உள்ளம் உவகை எய்தி, உண்மையான ஞானத்தை ப்ரஸாதமாகப் பெறுவோமாக!.

27 தி[3]ஶந்து மே தே[3]வ! ஸதா[3] த்வதீ[3]யா:
த[3]யாதரங்கா[3] நுசரா: கடாக்ஷா: |
ஶ்ரோத்ரேஷு பும்ஸாமம்ருதம் க்ஷரந்தீம்
ஸரஸ்வதீம் ஸம்ஶ்ரித காமதே[4]நும் ||

இந்த ஶ்லோகம் பக்தர்கள் உணர்ந்து மனம் ஒருநிலைப்பட ஹேதுவாக உள்ளது. எம்பெருமானே உபாயம், உபேயம் என உணர்ந்து, தேஹ யாத்திரை பற்றிய கவலையை விட்டொழித்து

நிலைபெறுகிறோம். தேஹயாத்திரை கர்மவினையை ஒத்து நடைபெறும். ஆயினும்

*“சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்னச் சொன்ன பழமொழியுள் -ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு“*

எனக்கூறியதன் தாத்பர்யம் இங்கு விஶேஷமாக விளங்கப் பெறுகிறது. ஸ்வாமியே நம்போன்ற ஸம்ஸாரிகளுக்கு தேஹயாத்திரையில் நேரக்கூடிய பரிஶ்ரமங்கள், கஷ்டங்கள், துக்கங்கள் முதலியன நிவ்ருத்தியாக தாமே, நேரில் ஸாக்ஷாத்கரிக்கும் ஸ்ரீ ஹயக்ரீவனை வேண்டுகிறார்.

“ஸ்ரீ ஹயக்ரீவ பெருமானே ! கரைபுரண்டு ஓடும் உமது திவ்ய கடாக்ஷ வைபவத்தால் அடியேன் கவிபாடும் வல்லமையை எப்போதும் பெற்றிருக்க வேண்டும். அவை கேட்பவர் செவிக்கு அமுதம் போன்று ஹிதமளித்தும், அடியார்க்குக் காமதேனுவைப் போலிருந்து வேண்டுவோர் வேண்டிய பலன்களை அள்ளித்தருவதாகவும் அமைந்திருக்க வேண்டும்“.

28 விஶேஷ வித்பாரிஷ தே³ஷு நாத²!
விதக்³த⁴ கோ³ஷ்டீ ஸமராங்க³ணேஷு |
ஜிகீ³ஷதோ மே கவிதார்க்கி கேந்த்³ராந்
ஜிஹ்வாக்³ர ஸிம்ஹாஸநமப்⁴யுபேயா: ||

பொதுவாகவே வாதம் புரிவதற்கு தனித்திறம் தேவையென்பது உண்மை. மெய்யான தத்வார்த்தங்களேயாயினும் நாவன்மையுடையவரால் மட்டுமே, சீரிய முறையில் எதிர் கொள்பவர் மனதில்படும்படியாக விஶேஷ அர்த்தங்களை முன் வைக்க முடியும். ஸாக்ஷாத் ஸ்ரீ ஸ்வாமி பகவத் ராமாநுஜர் காஷ்மீரத்தில் தர்க்க வித்வானை வென்று, விஶிஷ்டாத்வைத மதத்தை ஸ்ரீ பாஷ்யம் கொண்டு ஸ்தாபிப்பதற்கு ஹேதுவாக ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திவ்ய

மங்கள விக்ரஹத்தை ஸ்ரீ ஸரஸ்வதி தேவி அவருக்கு ப்ரஸாதித்து அருளினாள் என்பது ப்ரஸித்தமான விஷயம். ஸரஸ்வதிதேவி ஸ்ரீ பரிமுகனின் மடியில் அமர்ந்துள்ள வாக்தேவியின் பதினாறில் ஒரு பங்கு என ஶாஸ்திரம் கூறுகிறது. ஆக, வாக்ஶக்தி வேண்டுபவர் ஸ்ரீவாக்தேவியுடன் கூடிய ஸ்ரீ ஹயக்ரீவனைத்தானே தியானிப்பர்! அதனால் ஸ்வாமி தேஶிகன் இந்த ஶ்லோகத்தில் கற்றறிந்த வித்வான்களை மத்யஸ்தர்களாகக் கொண்ட சபையில் யுக்தியாகவும், ஸாமர்த்யமாகவும், தர்க்கங்களையும், உண்மைப் பொருளையும் முன் வைத்து, எதிர்கொள்பவர்களை வெல்வதற்கு வாக்தேவியுடன் கூடிய பரிமுகன் தமது நாவின் நுனியில் ஸிம்ஹாஸனம் அமைத்து அமர்ந்து உதவ வேண்டுமென ப்ரார்த்திருக்கிறார்.

29 த்வாம் சிந்தயந் த்வந்மயதாம் ப்ரபந்ந:
த்வாமுத்$^3$க்$^3$ருணந் ஶப்த$^3$மயேந தா$^3$ம்நா |
ஸ்வாமிந்! ஸமாஜேஷு ஸமேதி$^4$ஷீய
ஸ்வச்ச$^2$ந்த$^3$ வாதா$^3$ஹவ பத்$^3$த$^4$ஶூர: ||

இதற்கு முன் ஶ்லோகங்களில் ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீ ஹயக்ரீவனுடைய திருக்கைகள், ஞான முத்திரை, அக்ஷமாலா, திருமேனியின் ஶுத்த ஸ்படிகஸங்காஶமான வெண்மை ஒளி இவை யாவும் தியானிப்பவர்களுக்கு எவ்விதம் உண்மையான தத்வார்த்தங்களையும், விஶேஷார்த்தங்களையும் உணருமாறு செய்து, நிவ்ருத்தி தர்மத்தில் ஈடுபடச் செய்கிறது என்பதையும், இங்குள்ளவரை இகலோக வாஞ்சா பலன்களைப் பெற்று உய்யவும் செய்கின்றன என்பதையும் விசதமாகக் குறிப்பிட்டர்.

அடுத்த நிலையாக இந்த ஶ்லோகத்தில் ஸ்ரீ ஹயக்ரீவனை, அவர் திருமேனியை தியானிப்பவர், ஶரணாகதி செய்து அவ்வெம் பெருமானின் தன்மையையே பெற்று உயர்கின்றனர் எனக் கூறுகிறார். "கருட பஞ்சாஶத்" ஸ்தோத்திரத்தில் பலன்கூறி தலைகட்டுமிடத்து "தார்க்ஷ்ய கல்பா பவந்தி" – எனக்கூறி கருட பகவானை அநுஸந்திப்போர் கருட பகவானாகவே ஆகின்றனர். அதாவது கருடனைப் போன்ற கைங்கர்யஶ்ரீ பெற்று விளங்குவர் எனக் கூறினார். இங்கு ஸ்ரீ ஹயக்ரீவனை தியானித்து

ஸ்ரீ ஹயக்ரீவனின் தன்மையையே பெறலாம் என்கிறார். அதாவது ஸ்ரீ ஹயக்ரீவனின் மந்திரத்தை ஜபித்துக் கொண்டு அதன் பயனாய் ப்ரதிவாதிகளை சபையில் வெல்லக்கூடிய தீரனாக விளங்குவர் எனப் பெருமையாகப் பேசுகிறார்.

30 நாநாவிதா⁴நா மக³தி: கலாநாம்
நசாபி தீர்த்தே²ஷு க்ருதாவதார: |
த்⁴ருவம் தவாநாத² பரிக்³ரஹாயா:
நவம் நவம் பாத்ரமஹம் த³யாயா: ||

இந்த ஶ்லோகத்தில் நமக்காக ஸ்வாமி நைச்சியாநுஸந்தானம் (அதாவது தம்மை குறைத்து பேசுவது) செய்கிறார். அடியோங்கள் பலவித கலைகளைக் கற்று தேறியவருமல்லர். புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய நற்புண்ணியத்தையும் செய்தவரல்லர். 'தீர்த்தர்' – என்கிற பதம் இங்கு விஶேஷ அர்த்தம் ஒன்றையும் ஸூசிப்பிக்கின்றது. தீர்த்தர் என்ற பதம் மஹநீயர்களை, ஆசார்ய புருஷர்களைக் குறிக்கும். அப்படிப்பட்ட ஆசார்ய புருஷர்களின் திருவடிகளைப் பற்றி, நல்வழிப்பட்டு உண்மையான அர்த்த விஶேஷங்களை அடியோங்கள் அறிந்தவருமல்லர். இப்படிப்பட்ட எதற்கும் லாயக்கற்ற இழிந்த நிலையில் அடியோங்கள் உள்ளோம். ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே ! நீரோ அகதிகளையே தேடித்தேடி ஏற்றுக்கொள்ளும் கருணையின் பிறப்பிடமாய் இருக்கின்றீர். அவ்வித அவ்யாஜமான உமது கருணைக்கு அடியேன் மிகப்புதிய பாத்திரனாய் இருக்கிறேன். இது நிச்சயம். ஆதலால் இவ்வித நூதனமான கஶடனை ஏற்று அருள்புரிய வேண்டும்.

31 அகம்பநீயாந் யபநீதி பே⁴தை³:
அலங்க்ருஷீரந் ஹ்ருத³யம் மதீ³யம் |
ஶங்கா களங்கா பக³மோஜ்வலாநி
தத்வாநி ஸம்யஞ்சி தவ ப்ரஸாதா³த் ||

ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானே ! உமது திருவருளைப் பெற்றதன் பயனாய் அடியேன் உள்ளத்திலுள்ள ஸந்தேஹமாகிய களங்கங்கள் நீங்கிவிடும். தத்துவங்களின் உண்மை நிலை புலப்பட்டு ஸத்தான

ஞானம் பிறக்கும். இந்த ஒப்பற்ற ஞானம் நிலைபெற்று விளங்கும். இவைகளுக்கு யுக்தியாக எதிர்வாதங்களை ஸமர்ப்பிக்கும் குத்ருஷ்டிகளால் அடியேன் மனம் கலங்காது உண்மை கருத்துக்கள் நிலைபெற்று ஒளிருமாறு அடியேனுக்கு அருள் புரிய வேண்டும்.

32 வ்யாக்$^{2}$யா முத்$^{3}$ராம் கரஸரஸிஜை: புஸ்தகம் ஶங்க$^{2}$சக்ரே
பி$^{3}$ப்$^{4}$ரத்$^{3}$பி$^{4}$ந்த ஸ்ப$^{2}$டிகருசிரே புண்ட$^{3}$ரீகே நிஷண்ண: |
அம்லாநஶ்ரீ ரம்ருத விஶதை$^{3}$ ரம்ஶுபி$^{4}$: ப்லாவயந்மாம்
ஆவிர்பூ$^{4}$யா த$^{3}$நக$^{4}$ மஹிமா மாநஸே வாக$^{3}$தீ$^{4}$ஶ: ||

ஸ்ரீ ஹயக்ரீவன் பிரத்யக்ஷமாய் எழுந்தருளியிருக்க, ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனால் அவர் முன்னிலையில் கவனம் செய்த அபூர்வமான ஸ்தோத்திரம் இது. வெளிப்படையாக இதற்கு பதஅர்த்தம் கூறினாலும், உள்ளே பொதிந்திருக்கும் தத்வார்த்தங்களையும், ஸ்ரீ ஹயக்ரீவனைப் பற்றி ஶாஸ்திரங்கள் கூறும் மந்திரங்களையும் குறிப்பிட்டு விளக்கக்கூடிய திறமை அல்ப ஶ்ருதர்களாகிய அடியோங்களைப் போன்ற ஸாமாந்யர்களின் ஶக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். இந்த குறிப்பிட்ட ஶ்லோகம் ஸ்ரீ ஹயக்ரீவனை மனதார த்யானம் செய்ய, அந்த த்யானம் வாயிலாகப் புலப்படும் அவர் ஸ்வரூபத்தை விஸ்தாரமாகக் கூறுகிறது. தாமரை மலரையொத்த தமது நான்கு திருக்கரங்களில் பின் இரு திருக்கரங்களில் திருவாழியும், திருச்சங்கும் ஏந்தி இருக்கிறார். முன் இரு திருக்கரங்களில் வலது கரத்தில் ஞானமுத்திரையையும் இடது கரத்தில் புத்தகங்களையும் தரித்துள்ளார். அவருடைய ஒளி எந்நாளும் குறையாது. குற்றமில்லாத அவரது பெருமைக்கு அளவில்லை "அகில ஹேயகுண பிரத்யநீகன், ஸமஸ்த கல்யாண குணங்களின் கடல்" என ஸ்ரீ ஸ்வாமி பகவத் ராமாநுஜர் கூறியது போன்று விமலன், நிர்மலன்; இவ்விதமான ஸ்ரீ வெள்ளைப்பரிமுகர், ஸ்ரீ ஹயக்ரீவன் தமது குளிர்ந்த வெண்மை நிற ஒளியை அடியேன் மீது வீசச் செய்து எப்போதும் குன்றாது அடியேனுடைய உள்ளத்தில் திகழ வேண்டும்.

33 வாக$^{3}$ர்த்த$^{2}$ ஸித்$^{3}$தி$^{4}$ஹேதோ:
பட$^{2}$த ஹயக்$^{3}$ரீவ ஸம்ஸ்துதிம் ப$^{4}$க்த்யா |
கவிதார்க்கிக கேஸரிணா
வேங்கடநாதே$^{2}$ந விரசிதா மேதாம் ||

கவிதைகளுக்கும், தர்க்கம் செய்யும் நிபுணர்களுக்கும் ஸிம்ஹம் போன்ற ஸ்ரீ வேங்கடநாதன் என்னும் கவியால் இயற்றப்பட்ட இந்த ஸ்தோத்திரம் பக்தி ஶ்ரத்தையுடன் பாராயணம் செய்பவர்க்கு கவிபாடும் திறமையையும், அர்த்த ஞானத்தையும் ஈந்து ஞானத்தின் ஒளி வீசும்படிச் செய்யும்.

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாணகு$^{3}$ண ஶாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதா$^{3}$ந்த கு$^{3}$ரவே நம: ||





**25வது பட்ட அழகியசிங்கர் விஷயமான தனியன்**

ஸ்ரீவாஸ வீரரகுவர்ய பராங்குஶாதி
ராமாநுஜார்யமுநிபிர் குருஸார்வ பௌமை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பர்பூர்ணபோதம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதிஶேகர மாஶ்ரயாம: ||

ஶாபாநுக்ரஹ ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் 25வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர்
ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேஶிகன்
பஞ்சப்ருந்தாவனம், ந்ருஸிம்ஹபுரம், கும்பகோணம்

அடியவர் ஶாபங்களை அநுக்ரஹமாக மாற்றி
அருள்புரியும் ஸ்ரீகருடாம்ஶ ஆசார்யன்



ஸ்ரீ லக்ஷ்மீகுமார தாததேஸிகன்



ஸ்ரீ கோடி கன்னிகாதானம்
ஸ்ரீ ஸுந்தர தாதயார்ய மஹாதேஸிகன்

**ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவ பெருமாள் திருக்கோயில்,** புதுச்சேரி-3.

**இம்மஹநீயர்களுக்கு இந்நூல் ஸமர்ப்பிக்கப்படுகிறது.**

## ஸ்ரீ அநந்தாஷ்டோத்தர சதநாமாவளி

### முன்னுரை

எம்பெருமானுடைய அநந்த கல்யாண குண வைபவங்களை விளக்குவதான அநந்தமான நாமாவளிகளை அஷ்டோத்திரமாகவும், ஸஹஸ்ர நாமாவளியாகவும் நாம் அநுபவித்திருக்கிறோம். ப்ரணவம் என்கிற மூன்றெழுத்தில் "அகாரம்" பெருமானைக் குறிக்கும். அவனே அகாரவாச்யன் எனப்படுபவன். ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்ரீமத் நிகமாந்த மஹாதேஶிகன் த்வந்த்வ பத்ததி முதல் ஶ்லோகத்தில் இருபாதுகைகளைப் பொருத்தவரையில், அகாரவாச்யனாகிய, உயர்வற உயர்ந்த, பரமனை ஒன்றும், த்ருணமாத்ரம் பேசக்கூடிய ஜீவனான மகார வாச்யனை ஒன்றுமாக, இரு பாதுகைகளையும் இணைத்து இரண்டு ஸ்வரூபமாக விளங்குவதாக ஜீவனை ஏற்றிக் கொண்டாடுகிறார். சேதனன் ஒவ்வொரு நாமாவின் ஆரம்பமும் அகாரவாச்யனை பிரதிபாதிக்கும் நாமாவளி கொண்டு அர்ச்சிக்க, ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தம் தைலதாரையாக, அவிச்சின்னமாக இருக்கும் என கருத்தில் கொண்டு இங்கு அநந்தாஷ்டோத்தர நாமாவளி அச்சிடப்படுகிறது. பக்தர்கள் பயன்பெற வேண்டும். அர்ச்சா மூர்த்திகளை திருக்கோயில்களில் இந்நாமாவளியால் அர்ச்சிப்பது மிகமிகப் பொருத்தமாகவும் அமைந்து ஆசார்ய கடாக்ஷம் விஶேஷமாகப் பெருகும்படி உள்ளது. ஸாத்விக எண்ணங்களே வெல்க! பெருகுக!

- தாழ்மையுடன்

விஷ்ணுப்ரியா

# अनन्तोष्टोत्तरशतनामावलिः

१ ओं अनन्ताय नमः
२ ओं अच्युताय नमः
३ ओं अद्भुतकर्मणे नमः
४ ओं अमितविक्रमाय नमः
५ ओं अपराजिताय नमः
६ ओं अखण्डाय नमः
७ ओं अग्निनेत्राय नमः
८ ओं अग्निवपुषे नमः
९ ओं अदृश्याय नमः
१० ओं अत्रिपुत्राय नमः
११ ओं अट्टहासाय नमः
१२ ओं अनाकुलाय नमः
१३ ओं अघनाशिने नमः
१४ ओं अनघाय नमः
१५ ओं अप्सुनिलयाय नमः
१६ ओं अर्हाय नमः
१७ ओं अष्टमूर्तये नमः
१८ ओं अनिरुद्धाय नमः
१९ ओं अनिर्विण्णाय नमः
२० ओं अचञ्चलाय नमः
२१ ओं अष्टदिक्पालमूर्तये नमः
२२ ओं अखिलमूर्तये नमः
२३ ओं अव्यक्ताय नमः
२४ ओं अरूपाय नमः
२५ ओं अनन्तरूपाय नमः
२६ ओं अभयङ्कराय नमः
२७ ओं अक्षराय नमः
२८ ओं अभ्रवपुषे नमः
२९ ओं अयोनिजाय नमः
३० ओं अरविन्दाक्षाय नमः
३१ ओं अशनवर्जिताय नमः
३२ ओं अधोक्षजाय नमः
३३ ओं अत्रिपुत्राय नमः
३४ ओं अम्बिकापतिपूर्वजाय नमः
३५ ओं अपस्मारनाशिने नमः
३६ ओं अव्ययाय नमः
३७ ओं अनादिनिधनाय नमः
३८ ओं अप्रमेयाय नमः
३९ ओं अघशात्रवे नमः
४० ओं अमरारिघ्ने नमः
४१ ओं अमरविघ्नहन्त्रे नमः
४२ ओं अनीश्वराय नमः
४३ ओं अजाय नमः
४४ ओं अनादये नमः
४५ ओं अमरप्रभवे नमः
४६ ओं अग्राह्याय नमः
४७ ओं अक्रूराय नमः
४८ ओं अनुत्तमाय नमः
४९ ओं अह्ने नमः
५० ओं अमोघाय नमः
५१ ओं अक्षयाय नमः
५२ ओं अमृताय नमः

# அநந்தாஷ்டோத்தரஶதநாமாவளி:

1 ஓம் அநந்தாய நம:
2 ஓம் அச்யுதாய நம:
3 ஓம் அத்பு⁴தகர்மணே நம:
4 ஓம் அமிதவிக்ரமாய நம:
5 ஓம் அபராஜிதாய நம:
6 ஓம் அக²ண்டா³ய நம:
7 ஓம் அக்³நிநேத்ராய நம:
8 ஓம் அக்³நிவபுஷே நம:
9 ஓம் அத்³ருஶ்யாய நம:
10 ஓம் அத்ரிபுத்ராய நம:
11 ஓம் அத்³ருஹாஸாய நம:
12 ஓம் அநாகுலாய நம:
13 ஓம் அக⁴நாஶிநே நம:
14 ஓம் அநகா⁴ய நம:
15 ஓம் அப்ஸுநிலயாய நம:
16 ஓம் அர்ஹாய நம:
17 ஓம் அஷ்டமூர்த்தயே நம:
18 ஓம் அநிருத்³தா⁴ய நம:
19 ஓம் அநிர்விண்ணாய நம:
20 ஓம் அசஞ்சலாய நம:
21 ஓம் அஷ்டதி³க்பாலமூர்த்தயே நம:
22 ஓம் அகி²லமூர்த்தயே நம:
23 ஓம் அவ்யக்தாய நம:
24 ஓம் அரூபாய நம:
25 ஓம் அநந்தரூபாய நம:
26 ஓம் அப⁴யங்கராய நம:
27 ஓம் அக்ஷராய நம:
28 ஓம் அப்⁴ரவபுஷே நம:
29 ஓம் அயோநிஜாய நம:
30 ஓம் அரவிந்தா³க்ஷாய நம:
31 ஓம் அஶநவர்ஜிதாய நம:
32 ஓம் அதோ⁴க்ஷஜாய நம:
33 ஓம் அத்ரிபுத்ராய நம:
34 ஓம் அம்பி³காபதிபூர்வஜாய நம:
35 ஓம் அபஸ்மாரநாஶிநே நம:
36 ஓம் அவ்யயாய நம:
37 ஓம் அநாதி³நித⁴நாய நம:
38 ஓம் அப்ரமேயாய நம:
39 ஓம் அக⁴ஶத்ரவே நம:
40 ஓம் அமராரிக்⁴நே நம:
41 ஓம் அமரவிக்⁴நஹந்த்ரே நம:
42 ஓம் அநீஶ்வராய நம:
43 ஓம் அஜாய நம:
44 ஓம் அநாத³யே நம:
45 ஓம் அமரப்ரப⁴வே நம:
46 ஓம் அக்³ராஹ்யாய நம:
47 ஓம் அக்ரூராய நம:
48 ஓம் அநுத்தமாய நம:
49 ஓம் அஹ்நே நம:
50 ஓம் அமோகா⁴ய நம:
51 ஓம் அக்ஷயாய நம:
52 ஓம் அம்ருதாய நம:

५३ ओं अघोरवीर्याय नमः
५४ ओं अव्यङ्गाय नमः
५५ ओं अविघ्नाय नमः
५६ ओं अतीन्द्रियाय नमः
५७ ओं अमिततेजसे नमः
५८ ओं अष्टाङ्गन्यस्तरूपाय नमः
५९ ओं अनिलाय नमः
६० ओं अवशाय नमः
६१ ओं अणोरणीयसे नमः
६२ ओं अशोकाय नमः
६३ ओं अनुकूलाय नमः
६४ ओं अमिताशनाय नमः
६५ ओं अरण्यवासिने नमः
६६ ओं अप्रमत्ताय नमः
६७ ओं अनलाय नमः
६८ ओं अनिर्देश्यवपुषे नमः
६९ ओं अहोरात्राय नमः
७० ओं अमृत्यवे नमः
७१ ओं अकारादिहकारान्ताय नमः
७२ ओं अनिमिषाय नमः
७३ ओं अस्त्ररूपाय नमः
७४ ओं अग्रगण्याय नमः
७५ ओं अप्रथिताय नमः
७६ ओं असंख्याय नमः
७७ ओं अमरवर्याय नमः
७८ ओं अन्नपतये नमः
७९ ओं अमृतपतये नमः
८० ओं अजिताय नमः
८१ ओं अपां निधये नमः
८२ ओं अपां पतये नमः
८३ ओं असुरघातिने नमः
८४ ओं अमरप्रियाय नमः
८५ ओं अधिष्ठानाय नमः
८६ ओं अरविन्दप्रियाय नमः
८७ ओं अरविन्दोद्भवाय नमः
८८ ओं अष्टसिद्धिदाय नमः
८९ ओं अनन्तशयनाय नमः
९० ओं अनन्तब्रह्माण्डपतये नमः
९१ ओं अशिववर्जिताय नमः
९२ ओं अतिभूषणाय नमः
९३ ओं अविद्याहराय नमः
९४ ओं अतिप्रियाय नमः
९५ ओं अकल्मषाय नमः
९६ ओं अकल्पाय नमः
९७ ओं अब्ददिकाय नमः
९८ ओं अचलरूपाय नमः
९९ ओं अघोराय नमः
१०० ओं अक्षोभ्याय नमः
१०१ ओं अलक्ष्मीशमनाय नमः
१०२ ओं अतिसुन्दराय नमः
१०३ ओं अमोघौघाधिपतये नमः
१०४ ओं अक्षताय नमः
१०५ ओं अमितप्रभावाय नमः
१०६ ओं अवनीपतये नमः
१०७ ओं अर्चिष्मते नमः
१०८ ओं अपवर्गप्रदाय नमः

53 ஓம் அகோ⁴ரவீர்யாய நம:
54 ஓம் அவ்யங்கா³ய நம:
55 ஓம் அவிக்⁴நாய நம:
56 ஓம் அதீந்த்³ரியாய நம:
57 ஓம் அமிததேஜஸே நம:
58 ஓம் அஷ்டாங்க³ந்யஸ்தரூபாய நம:
59 ஓம் அநிலாய நம:
60 ஓம் அவஶாய நம:
61 ஓம் அணோரணீயஸே நம:
62 ஓம் அஶோகாய நம:
63 ஓம் அநுகூலாய நம:
64 ஓம் அமிதாஶநாய நம:
65 ஓம் அரண்யவாஸிநே நம:
66 ஓம் அப்ரமத்தாய நம:
67 ஓம் அநலாய நம:
68 ஓம் அநிர்தே³ஶ்யவபுஷே நம:
69 ஓம் அஹோராத்ராய நம:
70 ஓம் அம்ருத்யவே நம:
71 ஓம் அகாராதி³ஹகாராந்தாய நம:
72 ஓம் அநிமிஷாய நம:
73 ஓம் அஸ்த்ரரூபாய நம:
74 ஓம் அக்³ரக³ண்யாய நம:
75 ஓம் அப்ரதி³தாய நம:
76 ஓம் அஸங்க்²யாய நம:
77 ஓம் அமரவர்யாய நம:
78 ஓம் அந்நபதயே நம:
79 ஓம் அம்ருதபதயே நம:
80 ஓம் அஜிதாய நம:
81 ஓம் அபாம் நித⁴யே நம:
82 ஓம் அபாம் பதயே நம:
83 ஓம் அஸுரகா⁴திநே நம:
84 ஓம் அமரப்ரியாய நம:
85 ஓம் அதி⁴ஷ்டா²நாய நம:
86 ஓம் அரவிந்த³ப்ரியாய நம:
87 ஓம் அரவிந்தோ³த்³ப⁴வாய நம:
88 ஓம் அஷ்டஸித்³தி⁴தா³ய நம:
89 ஓம் அநந்தஶயநாய நம:
90 ஓம் அநந்தப்³ரஹ்மாண்ட³பதயே நம:
91 ஓம் அஶிவவர்ஜிதாய நம:
92 ஓம் அதிபூ⁴ஷணாய நம:
93 ஓம் அவித்³யாஹராய நம:
94 ஓம் அதிப்ரியாய நம:
95 ஓம் அகல்மஷாய நம:
96 ஓம் அகல்பாய நம:
97 ஓம் அப்³தி³காய நம:
98 ஓம் அசலரூபாய நம:
99 ஓம் அகோ⁴ராய நம:
100 ஓம் அக்ஷோப்⁴யாய நம:
101 ஓம் அலக்ஷ்மீஶமநாய நம:
102 ஓம் அதிஸூந்த்³ராய நம:
103 ஓம் அமோகௌஎ⁴கா⁴தி⁴பதயே நம:
104 ஓம் அக்ஷதாய நம:
105 ஓம் அமிதப்ரபா⁴வாய நம:
106 ஓம் அவநீபதயே நம:
107 ஓம் அர்ச்சிஷ்மதே நம:
108 ஓம் அபவர்க³ப்ரதா³ய நம:

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ ஸ்ரீஹயக்3ரீவாஷ்டோத்தரஶதநாமாவளி: ‖

| | | | |
|---|---|---|---|
| 1 | ஓம் ஹயக்3ரீவாய நம: | 2 | ஓம் மஹாவிஷ்ணவே நம: |
| 3 | ஓம் கேஶவாய நம: | 4 | ஓம் மது4ஸூத3நாய நம: |
| 5 | ஓம் கோ3விந்தா3ய நம: | 6 | ஓம் புண்ட3ரீகாக்ஷாய நம: |
| 7 | ஓம் விஷ்ணவே நம: | 8 | ஓம் விஶ்வம்ப4ராய நம: |
| 9 | ஓம் ஹரயே நம: | 10 | ஓம் ஆதி3த்யாய நம: |
| 11 | ஓம் ஸர்வவாகீ3ஶாய நம: | 12 | ஓம் ஸர்வாதா4ராய நம: |
| 13 | ஓம் ஸநாதநாய நம: | 14 | ஓம் நிராதா4ராய நம: |
| 15 | ஓம் நிராகாராய நம: | 16 | ஓம் நிரீஶாய நம: |
| 17 | ஓம் நிருபத்3ரவாய நம: | 18 | ஓம் நிரஞ்ஜநாய நம: |
| 19 | ஓம் நிஷ்கலங்காய நம: | 20 | ஓம் நித்யத்ருப்தாய நம: |
| 21 | ஓம் நிராமயாய நம: | 22 | ஓம் சிதா3நந்த3மயாய நம: |
| 23 | ஓம் ஸாக்ஷிணே நம: | 24 | ஓம் ஶரண்யாய நம: |
| 25 | ஓம் ஸர்வதா3யகாய நம: | 26 | ஓம் ஸ்ரீமதே நம: |
| 27 | ஓம் லோகத்ரயாதீ4ஶாய நம: | 28 | ஓம் ஶிவாய நம: |
| 29 | ஓம் ஸாரஸ்வதப்ரதா3ய நம: | 30 | ஓம் வேதோ3த்3த4ர்த்ரே நம: |
| 31 | ஓம் வேத3நித4யே நம: | 32 | ஓம் வேத3வேத்3யாய நம: |
| 33 | ஓம் ப்ரபூ4த்தமாய நம: | 34 | ஓம் பூர்ணாய நம: |
| 35 | ஓம் பூரயித்ரே நம: | 36 | ஓம் புண்யாய நம: |
| 37 | ஓம் புண்யகீர்தயே நம: | 38 | ஓம் பராத்பராய நம: |

ஸ்ரீஹயக்3ரீவாஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 39 | ஓம் பரமாத்மநே நம: | 40 | ஓம் பரஜ்யோதிஷே நம: |
| 41 | ஓம் பரேஶாய நம: | 42 | ஓம் பாரகா3ய நம: |
| 43 | ஓம் பராய நம: | 44 | ஓம் ஸர்வவேதா3த்மகாய நம: |
| 45 | ஓம் விது3ஷே நம: | 46 | ஓம் வேத3வேதா3ந்த-பாரகா3ய நம: |
| 47 | ஓம் ஸகலோபநிஷத்3-வேத்3யாய நம: | 48 | ஓம் நிஷ்கலாய நம: |
| 49 | ஓம் ஸர்வஶாஸ்த்ரக்ருதே நம: | 50 | ஓம் அக்ஷமாலாஜ்ஞாந-முத்3ராயுக்தஹஸ்தாய நம: |
| 51 | ஓம் வரப்ரதா3ய நம: | 52 | ஓம் புராணாய நம: |
| 53 | ஓம் புருஷஶ்ரேஷ்டா2ய நம: | 54 | ஓம் ஶரண்யாய நம: |
| 55 | ஓம் பரமேஶ்வராய நம: | 56 | ஓம் ஶாந்தாய நம: |
| 57 | ஓம் தா3ந்தாய நம: | 58 | ஓம் ஜிதக்ரோதா4ய நம: |
| 59 | ஓம் ஜிதாமித்ராய நம: | 60 | ஓம் ஜக3ந்மயாய நம: |
| 61 | ஓம் ஜந்மம்ருத்யுஹராய நம: | 62 | ஓம் ஜீவாய நம: |
| 63 | ஓம் ஜயதா3ய நம: | 64 | ஓம் ஜாட்3யநாஶநாய நம: |
| 65 | ஓம் ஜபப்ரியாய நம: | 66 | ஓம் ஜபஸ்துத்யாய நம: |
| 67 | ஓம் ஜாபகப்ரியக்ருதே நம: | 68 | ஓம் ப்ரப4வே நம: |
| 69 | ஓம் விமலாய நம: | 70 | ஓம் விஶ்வரூபாய நம: |
| 71 | ஓம் விஶ்வகோ3ப்த்ரே நம: | 72 | ஓம் விதி4ஸ்துதாய நம: |
| 73 | ஓம் விதீ4ந்த்3ரஶிவ-ஸம்ஸ்துத்யாய நம: | 74 | ஓம் ஶாந்திதா3ய நம: |
| 75 | ஓம் க்ஷாந்திபாரகா3ய நம: | 76 | ஓம் ஶ்ரேய:ப்ரதா3ய நம: |

ஸ்ரீஹயக்ரீவாஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 77 | ஓம் ஶ்ருதிமயாய நம: | 78 | ஓம் ஶ்ரேயஸாம்பதயே நம: |
| 79 | ஓம் ஈஶ்வராய நம: | 80 | ஓம் அச்யுதாய நம: |
| 81 | ஓம் அநந்தரூபாய நம: | 82 | ஓம் ப்ராணதாய நம: |
| 83 | ஓம் ப்ருதிவீபதயே நம: | 84 | ஓம் அவ்யக்தாய நம: |
| 85 | ஓம் வ்யக்தரூபாய நம: | 86 | ஓம் ஸர்வஸாக்ஷிணே நம: |
| 87 | ஓம் தமோஹராய நம: | 88 | ஓம் அஜ்ஞாநநாஶகாய நம: |
| 89 | ஓம் ஜ்ஞாநிநே நம: | 90 | ஓம் பூர்ணசந்த்ர-ஸமப்ரபாய நம: |
| 91 | ஓம் ஜ்ஞாநதாய நம: | 92 | ஓம் வாக்பதயே நம: |
| 93 | ஓம் யோகிநே நம: | 94 | ஓம் யோகீஶாய நம: |
| 95 | ஓம் ஸர்வகாமதாய நம: | 96 | ஓம் மஹாயோகிநே நம: |
| 97 | ஓம் மஹாமௌநிநே நம: | 98 | ஓம் மௌநீஶாய நம: |
| 99 | ஓம் ஶ்ரேயஸாங்கதயே நம: | 100 | ஓம் ஹம்ஸாய நம: |
| 101 | ஓம் பரமஹம்ஸாய நம: | 102 | ஓம் விஶ்வகோப்த்ரே நம: |
| 103 | ஓம் விராஜே நம: | 104 | ஓம் ஸ்வராஜே நம: |
| 105 | ஓம் ஶுத்தஸ்படிக-ஸங்காஶாய நம: | 106 | ஓம் ஜடாமண்டல-ஸம்யுதாய நம: |
| 107 | ஓம் ஆதிமத்யாந்தரஹிதாய நம: | 108 | ஓம் ஸர்வவாகீஶ்வ-ரேஶ்வராய நம: |

॥ இதி ஸ்ரீஹயக்ரீவாஷ்டோத்தரஶதநாமாவளி: ஸம்பூர்ணா ॥



ஸ்வாமி ஸ்ரீமத் ராமானுஜர்

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஸிகன்

ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவ பெருமாள் திருக்கோயில், புதுச்சேரி-3.



ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்